பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 23 | பங்குனி 20 | ஜ. அவ்வல் 26 | இதழ் 51
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 2 - 4 - 81

-4-1981

## விமானப்படை விமானத்தில் பூதவுடல் யாழ். வரும்

(கொழும்பு)

அமரர் திரு. கதிரவேலுப்பிள்ளையின் பூதவுடல் நேற்று இரவு 8-30 மணியளவில் எயர் லங்கா விமானமூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தது.

விமான நிலையத்தில் நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உட்பட கூட்டணி ஆதரவாளர்கள் பலர் கூடியிருந்தனர்.

பூதவுடல் இன்று காலை விமானப்படை விமானத்தில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்படும். பூதவுடலைக் கொண்டுசெல்வதற்கு விமானத்தை அரசு கொடுத்துதவியுள்ளது. (ம-இ)

# கோப்பாய் எம்.பியின் பூதவுடல் இன்று தகனம்!

## பிரதமர், 15 அமைச்சர்கள் நேரில் அஞ்சலி



## யாழ்நகரில்கடையடைப்பு

### கோப்பாயில் பாடசாலை விழாக்கள் ரத்து

(யாழ்ப்பாணம்)

சென்னையில் நேற்றுமுன்தினம் காலமான கோப்பாய் எம். பி திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் பூதவுடல் இன்று மாலை கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

மறைந்த தலைவருக்கு நேரில் அஞ்சலி செலுத்துவதற்காக பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும், அவருடன் இணைந்து அமைச்சர்களும் இன்று வருகின்றார்கள்.

அமரரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக கோப்பாய் தொகுதிலுள்ள சகல பாடசாலைகளும் இன்று பிற்பகல் இரண்டு மணியுடன் மூடப்படும். இதற்கான சுற்று நிருபங்கள் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. கே. சிவநாதனால் கோப்பாய்த் தொகுதியிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

### 'அமிர்' விடுத்துள்ள கோரிக்கை

மரணச் செய்தி அறிந்ததும் யாழ்ப்பாண நகரம் வெறிச்சோடிக்காணப்பட்டது. சகல வீதிகளிலும், கடைகளிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன

இன்று தமிழ் தேசிய இனம் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும்பாடசாலைமாணவர்கள் அணிவகுத்து வந்து அமரருக்கு அஞ்சலி செலுத்துமாறும் இன்று முழுநாளும் கடைகளையும் வர்த்தக ஸ்தாபனங்களையும் அடைத்து மறைந்த தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்

கடைகளைப்பூட்டி அஞ்சலி செலுத்துமாறு யாழ். மேயர் திரு இ. விசுவநாதன், யாழ். நவீனசந்தை வர்த்தக உரிமையாளர் சங்கத்தலைவர் திரு த. சங்கரப்பிள்ளை ஆகியோரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

### 'பெஸ்டஸ்' அஞ்சலி

மீன்பிடித்துறை அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா நேற்று அமரர் கதிரவேலுப்பிள்ளையின் இல்லத்திற்கு சென்று நேரில் அஞ்சலி செலுத்தினார். (கு)

### பாடசாலை விழாக்கள் ரத்து

கோப்பாய் கல்விவட்டாரத்திலும், யாழ். நகர பாடசாலைகளிலும் நடைபெறவிருந்த விளையாட்டுப்போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள், கலைநிகழ்ச்சிகள் யாவும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

இதற்கான பணிப்புரையை வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஏ. தங்கராசா விடுத்துள்ளார்.

## சுவீப்முடிவு

(கொழும்பு)

இரத்தினபுரியில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 113வது மகா ஜனசம்பந்த சுவீப் முடிவுகள்

1-ம் பரிசு:
**20 S 0938**
ரூ 2 லட்சத்து 50 ஆயிரம்

2ம்: பரிசு:
**12 Z 0259**
ரூ 1லட்சத்து,50 ஆயிரம்

3வது பரிசு:
**38 C 0659**
ரூ 50 ஆயிரம்

ஆறுதல் பரிசு விபரம் நாளை வெளிவரும். (ம-கு)

## ஒருவர் கைது

(மாவிட்டபுரம்)

இரண்டு துப்பாக்கி ரவைகளுடன் வீதியால் சென்ற நபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

புத்தூர் நவக்கிரியைச் சேர்ந்த தம்பு துரைராஜா என்பவரே இவ்வாறு கைதானவராவார்.

நீர்வேலி வங்கிப்பணக் கொள்ளையயடுத்து விசேட கடமைக்காகதென்னிலங்கையிலிருந்து வந்துள்ள சப்இன்ஸ்பெக்டர் ரணசிங்கா தலைமையிலான பொலிஸ் கோஷ்டியே இவரைக்கைதுசெய்தது. (கு)

## "விடுதலைக்காக உழைத்த தியாகச்செம்மல்" - 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

"தன்னலமற்ற தமிழ்இனத்தின் விடுதலைக்காக உழைத்த தியாகச்செம்மல் திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் பிரிவு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்"

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகமுமான திரு. ஏ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

சென்ற 25ம் தேதி கொழும்பில் என்னைச் சந்தித்தபோது இந்தியாப் பிரயாணம் பற்றி பலமணிநேரம் என்னோடு உரையாடினார். பிற்பகல் 5-30 மணி வரைக்கும் என்னோடு இனத்தின் பிரச்சினைகள் பற்றி மனம் விட்டு பேசினார். தமது கூரிய மதிநுட்பத்தையும் பரந்த அறி

(8-ம் பக்கம் பார்க்க)

## "ஆற்றல் நிறைந்தவர் கோப்பாய் எம்.பி."

— யாழ். மாவட்ட அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

அறிவும் ஆற்றலும் நிறைந்த கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் எதிர்பாராத மறைவையிட்டுஎனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றேன்.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் வெளியிட்ட அனுதாபச்செய்தியில் மேற்கண்டாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும்கூறப்பட்டிருப்பதாவது: கடந்த 20 வருடகால அரசியல் வாழ்வில் சிறந்த மக்கள் பணியில், இவர் ஈடுபட்டிருந்தார். இவர் ஒர் திறமையான சட்டவல்லுனரும், தமது சமுதாய மக்களின் உரிமைகளுக்காக இடையறுது உழைத்த ஒரு தலைவருமாவர்.

பாராளுமன்றத்தில் அமைதியான பேச்சுக்களால் கருத்தாளம் கொண்ட கொள்கைகளை

(8-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் அஞ்சலி!

(யாழ்ப்பாணம்)

அமரர் எஸ். கதிரவேலுப்பிள்ளையின் பூதவுடல் எடுத்துவரப்படும் விமானம் இன்று காலை 6-30 மணியளவில் கொழும்பிலிருந்து பலாலி விமான நிலையத்தை வந்தடையும்.

விமானநிலையத்திலிருந்து பூதவுடல் யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நண்பகல் 12 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அவரது இல்லத்திலிருந்து நண்பகல் 12-30 மணியளவில் யாழ் நகரமண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 4 மணிவரை பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

யாழ். நகரமண்டபத்தில் பொதுமக்களின் அஞ்சலியைத் தொடர்ந்து தலைவர்கள், பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்துவர்.

யாழ். நகரமண்டபத்திலிருந்து பிற்பகல் 4-30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். (சி-த)

### நீர்வேலி வங்கிக் கொள்ளை - கொலை:

## கொள்ளையில் 11 இளைஞர்கள் விபரங்கள் கிடைத்தன!

### டி. ஐ. ஜி. மகேந்திரன் தகவல்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி இரட்டைக் கொலை, கொள்ளை சம்வத்தில் 12இளைஞர்கள் பங்கு பற்றியுள்ளர். வான் ஒன்றையும் அவர்கள் பயன்படுத்திபுள்ளனர் அவர்கள்பற்றிய சகல விபரங்களும் பொலிசாருக்குக் கிடைத்துவிட்டது.

வடயிரார்ந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. பி. மகேந்திரன் நேற்று மாலை நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்


## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான வர்த்தக நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த விற்பனையாளர்கள் தேவை நேரில் வரவும். Rajan Fancy House, 51, Model Market, Jaffna. (8744)

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை மானிப்பாய் பிரதான வீதிக்கு அருகாமையில் 7½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ''பூமணிவில்லா'' ஆனைக்கோட்டை. (8739)

## WANTED

Well experienced Accounts Clerk Age over 35 years with at least five years experience in a large firm. Arasco Industries, 163, Kandy Road, Jaffna. (8747)

## சோதிடம்

கல்வி, திருமணம், உத்தியோகம், வெளிநாடு செல்லுதல், மற்றும் பிரச்சனைகள் தீர்த்துவைக்கப்படும். குறிப்பு பார்க்க ரூ. 10/- K.L. M. Krishnapillaiy, Sriparasakthi Sothida Nilayam, Thangaraja Jewellery House, 15, Kannathiddy, Jaffna. Phone: 8005 (8748)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ

# டீசல் திருட்டுக் குறித்து ஊழியர் மீது விசாரணை

(நெல்லியடி)

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவுக்குரிய பஸ் வண்டிகளிலிருந்து டீசல் திருடப்படுவது சம்பந்தமாக இ. போ. ச. ஊழியர்கள் பலர் பருத்தித்துறை பொலிசாரினால் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக பஸ்வண்டிகளில் டீசல் குறைந்துவருவதாக சாரதிகள் டிப்போ நிர்வாகத்திற்கு புகார் செய்திருந்தார்கள்.

சாரதிகள் புகார் செய்ததோடு திருட்டைக்கண்டுபிடிப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டார்கள். டிப்போவிற்கு பின்புறமுள்ள அநாதரவான வீடொன்றிலிருந்து திருட்டுக்குப்பயன்படுத்திய சில பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டன. பொலிசாரினால் விசாரணைக்குள்ளாகியிருக்கும் ஊழியர்களில் சமயா சமய ஊழியர்களும் அடங்குவர்.

# ஆவரங்காலில் இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் பரராசசிங்கம் ஞாபகார்த்த 3வது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 2வது நாளான இன்று புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வி. கழகமும் உதய சூரியன் வி. கழகமும் மோதுகின்றன.

வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் இப் போட்டிக்குதிரு. வ. ஞானசம்பந்தர் மத்தியஸ்தராகக் கடமையாற்றுவார். (ச-அ)

# ''அதிர்ச்சியை தமிழினம் தாங்காது''

(யாழ்ப்பாணம்)

''தமிழினத்தின் மீதும் மொழி கலாசாரத்தின் மீதும் தமிழ் ஈழக் கொள்கைமீதும் நீங்காத தீவிர பற்றுக்கொண்டிருந்த சிந்தனைச்சிற்பி இ கதிரவேலுப்பிள்ளையின் திடீர் மறைவுச்செய்தி தந்த திடீர் அதிர்ச்சியை தமிழினம் தாங்கிக்கொள்ளாது. அன்னாரின் பொதுப்பணிகளை பொதுப் பணிநிறுவனங்களே அறியும். யாழ் மாணவர் அறப்பணி மன்றத்திற்கு அவர் ஆற்றிய உதவிகளை இந்நேரம் நினைவு கூருகிறேன்.''

இவ்வாறு பண்ணையில் அமைந்துள்ள சிவமயத்திற்கு அவை நற்பணிப்பொறுப்பாளரும் யாழ் மாணவர் அறப்பணிமன்றப் பொதுச்செயலாளருமான சகோ. லோ. நா. பாலகிருஷ்ணன், கோப்பாய் எம். பீ திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் மறைவையொட்டி விடுத்த அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# 'தமிழ்ஈழம்என்பது இலகுவில் அடையும் இலக்கல்ல''

(வவனியா)

''மக்களைத் தேடிச் சென்று அவர்களது கருத்துக்களையும், குறைகளையும் நாங்கள் கேட்டு அறிந்துகொள்ளவே கிராம யாத்திரையை மேற்கொண்டோம் இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் வேறு எந்த ஒரு அரசியல் கட்சியுமே இவ்வாறு கிராமங்கள் தோறும் மக்களின் கருத்தைநாடிச் சென்றதில்லை''

இவ்வாறு மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் எல்லப்பர் மருதங்குளத்தில் நடைபெற்ற கிராமயாத்திரைக் கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியபோது தெரிவித்ததாவது:

''எமது முதுகில் எந்தவித விதமான புண்களும் கிடையாது. நாங்கள் எந்தப் பற்றைக்குள்ளும் சென்று வருவோம். தமிழ் ஈழத்திற்காகப் போராடும் எம்மைப் பார்த்து எப்போது தமிழ் ஈழம் கிடைக்கப்போகிறது என்று சிலர் கேள்வி கேட்கிறார்கள். தமிழ் ஈழம் என்பது இலகுவில் சென்றடையக் கூடிய இலக்கு அல்ல. விடுதலைப்பயணம் என்பது நீண்ட பயணமாகும். அது இன்றே நாளையோ முடிவடைந்து விடாது. உலகெங்கும் நடைபெற்ற விடுதலைப்பயணங்கள் இந்த உண்மையை எமக்குப் புலப்படுத்தியுள்ளன. நாட்டு விடுதலைக்காகப் போராடும் எம்மிடையே இறுக்கமான ஒற்றுமையும், தளராத மனப்போக்கும் இருப்பது அவசியம்''

வட்டுக்கோட்டை எம். பி. திரு. திருநாவுக்கரசு பேசுகையில் தெரிவித்ததாவது!

''சமளங்குளத்தைச் சேர்ந்த கல்லுமலைப்பிள்ளையார் கோவிலுக்கு மண்டபம் அமைத்து வழிபடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென இக்கிராம மக்கள் கோரினார்கள் புதைபொருள் ஆராய்ச்சியின் பின் இப்பகுதியையும் இக்கோவில் பிரதேசத்தையும்சிங்களப்பகுதி என்று கூறிக்கொண்டு ஆக்கிரமிப்புச் செய்ய அரசாங்கம் முயல்கிறது. உரியநேரத்தில்நாங்கள் தலையிட்ட ஒரேகாரணத்தினால் அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புமுயற்சி முறியடிக்கப்பட்டது.

''மூலஸ்தானம் கட்டி முடிக்கப்பட்ட இக்கோவிலுக்கு மண்டபம் எழுப்புவதல்ல எமது முயற்சி இக்கோவிலும் கோவிலைச் சார்ந்த பிரதேசமும் எம்மிடமிருந்து பறிபோகாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டியதே முக்கியமாகும்.

கலாசாரத்தை இழந்தாலும் மீண்டும் தனைத் தழுவிக்கொள்ளலாம் ஆனால் எமது மண்ணை இழந்தால் இலகுவில் மீட்டுக்கொள்ள முடியாது. எனவே எமது இயக்கத்தின் ஒரே முடிவான எமது எல்லா பிரச்சனைகளினதும் ஒரே தீர்வான தமிழ் ஈழ விடுதலைக்காக ஒன்றிணைந்து செயல்படவேண்டும்''

இக்கிராம யாத்திரைக் கருத்தரங்கிற்கு ஆசிகுளம் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைச் செயலாளர் திரு கோ. நடேசபிள்ளை தலைமை வகித்தார். (அ)

# வீரமா முனிவர் இல்லம் வெற்றி

(மன்னார்)

வங்காலை மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள் வித்தியாலயமைதானத்தில்நடைபெற்றது. பாடசாலை அதிபர் திரு ஜொ. மக்ஸ்மன் தலைமையில் நடைபெற்றஇவ் விளையாட்டுப் போட்டியில் மன்னார் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு எம் சிமியாம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மூன்று இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் வீரமா முனிவர் இல்லம் 707 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

# தற்கொலை

(மாவிட்டபுரம்)

மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக கள்ளையும், கிருமிநாசினியையும்வாங்கிக் கொண்டு வீடு வந்த கணவர் ஒருவர் மனைவி முன்னிலையிலேயே இரண்டையும் சேர்த்து அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

தெல்லிப்பழை சித்தியப்புளியடி வாசியான வல்லிபுரம் கிட்டினன் (38 வயது என்பவரே இம் முடிவுக்கானவராவார். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு நா. தம்பிராசா இம் மரணம் குறித்து விசாரணை நடத்தினார். சாட்சியங்களைத் தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.


உங்கள் முதலீட்டிற்கு

27% வட்டி

நாங்கள் வழங்குகின்றோம்

அத்துடன் உங்களுக்கு

ஆயுள் காப்புறுதி இனும்

வீட்டுப்பாவனைப் பொருட்கள்

(பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்)

(சேவை)

நாம் உங்களுக்கு 41 வருடங்களாக சேவை செய்து வருகின்றோம் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றோம்.

★ நம்பிக்கை

★ பாதுகாப்பு

★ ஸ்திரதன்மை

TFC த பினான்ஸ் கம்பனி லிமிட்.,

191-249/c மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் போன் :- 7680


தொழிற்சாலைகளில்

# தொழிலாளர்களே தமது பாதுகாப்பைக் கவனிக்கவேண்டும்

## சங்கானை ப. நோ. கூ, ச. கருத்தரங்கில் வலியுறுத்து

(சங்கானை)

'தொழிற்சாலைகளில் ஊழியர் பாதுகாப்புக்காக பல சட்டங்கள் தற்போது அமுலிலுள்ள போதிலும் தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்களினது ஊழியர்களினதும் ஒத்துழைப்பின் மூலமே இச்சட்டங்களை ஒழுங்கான முறையில் அமுல் செய்து அவற்றின் பலா பலன்களை நாம் அனுபவிக்க முடியும். முக்கியமாக தொழிலாளர்களே தங்கள் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு சட்டதிட்டங்களின்படிநடந்து கொள்ள வேண்டும்'

இவ்வாறு உதவித் தொழில் ஆணையாளர் (தொழில் நுட்பம்) திரு. எஸ். சிவபாஸ்கரன் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கைத்தொழில் பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து நடாத்திய பாதுகாப்பு, சுகாதாரம், நலன்புரி பற்றிய கருத்தரங்கு நேற்று முன்தினம் சங்க செட்டபனிடும் பகுதி மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி சங்கத் தலைவர் திரு. கே. சி. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் இலங்கையின் கைத்தொழில் பாதுகாப்பு, சுகாதாரச் சட்டங்கள் என்னும் பொருள் பற்றி திரு. சிவபாஸ்கரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''அரசாங்கம்வெறுமனே சட்டங்களை இயற்றிவிட்டால் மட்டும் போதாது. அவற்றை ஒழுங்காக நடைமுறைப் படுத்தவேண்டும் அதற்கு இது போன்ற கருத்தரங்குகள் மிக அவசியமாகிறது.

1896ல் இலங்கையில்அமுலுக்குக்கொண்டு வரப்பட்ட இயந்திர சுரங்க பாதுகாப்புச்சட்டம் பின்னர் படிப்படியாக மாற்றங்களும் திருத்தங்களும் செய்யப்பட்டு வந்தது. 1976ம் ஆண்டு இச் சட்டம் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், சேம நலம் ஆகியவற்றை நோக்கமாகக்கொண்டு திருத்தம் செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில் தொழிற்சாலைகளில் ஒரு தொழிலாளி வேலைசெய்வதற்கு 400கன அடி இடம் ஒதுக்கப்படவேண்டும். காற்றோட்டம், வெளிச்சம் என்பன தொழிலுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட வேண்டும். அவசியம் ஏற்படும்போது கையுறைகள், முகமூடி ஆகியன அணியவேண்டும். எனவே தொழிலாளிகள் தங்களைத் தாங்களே பாதுகாக்க முன்வரவேண்டும் எத்தனையோ தொழிற்சாலைகளில் பாதுகாப்புச் சாதனங்கள் இருந்தபோதிலும் தொழிலாளர்கள் அதனை அணியாது விடுத்து வீணாக விபத்துக்களில் மாட்டிக் கொள்கிறார்கள் இந்நிலை தவிர்க்கப்படவேண்டும்.

ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஆலைச் சுற்றாடலினால் ஏற்படக்கூடிய சுகாதாரப் பாதிப்புகள் பற்றி உரையாற்றிய தொழில் டாக்டர் எம். இராஜேந்திரா தொழிலாளர்களுக்கு ஏற்படும் நோய், நோய்தடுப்பு குறித்து விரிவாக எடுத்துக் கூறியதுடன், சகல தொழிற்சாலைகளிலும் 'முதலுதவி' பிரிவு அமைக்கப்பட்டு ஒவ்வொரு 'ஷிவ்ட்' டிலும் முதலுதவியில் நன்கு பயிற்றப்பட்ட ஒரு ஊழியராவது கடமையில் அமர்த்தப்படுவது அவசியம் என்றும் கூறினார். ''தொழிற்சாலை விபத்துக்களும் தடுப்பு முறைகளும்'' ''தீயும் தீயினால் ஏற்படும் வெடி விபத்துக்களும்'' ஆகிய விடயங்கள்பற்றி திரு வி. கே. வாமதேவனும் உரையாற்றினர். (இ)

# தாய்லந்தில் இரத்தம் சிந்தாத புரட்சி மூலம் ஆட்சி கவிழ்ப்பு!

## இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியது; பிரதமர் ராஜினாமா; பாராளுமன்றம் கலைப்பு

பாங்கொக், ஏப்ரல் 1

தாய்லந்தில் இன்று அதிகாலை இடம்பெற்ற திடீர் இரத்தம்சிந்தாத இராணுவப் புரட்சியை அடுத்து அரசாங்கத்தை, இராணுவம் கைப்பற்றியுள்ளது.

எதிர்ப்பின்றி கஷ்டமின்றி இடம்பெற்ற இப் புரட்சியை அடுத்து தாய்லாந்து பிரதமரும் ஆயுதப்படைத்தலைவருமான ஜெனரல் பிரேம்தின் சுலானந்தா தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார் என்று தாய்லாந்து வானொலி அறிவித்தது.

முப்படைகளினதும் பொலிஸ்படையினதும் ஆதரவுடன் நடைபெற்ற புரட்சியை அடுத்து இராணுவப் படையின் துணைத் தலைவர் ஜெனரல் சாங்கி பிரட்றிமா அரசாங்கத்தைப் பொறுப்பேற்றுள்ளார். புதிய புரட்சிக் கட்சித் தலைவராகவும் இவர் பதவி ஏற்றுள்ளார்.

கவிழ்க்கப்பட்ட அரசின் துணைப்பிரதமராக இருந்த ஜெனரல் ஷோம்நக்கோன் புரட்சி கட்சியின் ஆலோசகராகவும் இராணுவபீடத்தின் தலைவர்களாகவும் புதிய அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தாய்லாந்தின் அரசியல் அமைப்பு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது என்றும் மக்கள் பீதியின்றி அமைதியாக இருக்க வேண்டும் என்றும் புதிய இராணுவ அரசு வானொலி மூலம் மக்களைக் கேட்டுள்ளது.

தாய்லாந்தில் அரசியல் கருத்துவேறுபாடுகளும் ஸ்திரமற்றநிலையும் இருந்தமையினாலேயே இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது என்று இராணுவபீடம் அறிவித்துள்ளது. (இ)

### துப்பாக்கி பாவிக்க கட்டுப்பாடு?

வாஷிங்டன் ஏப் 1.

அமெரிக்க மக்கள் துப்பாக்கி வைத்திருக்கும் உரிமை கட்டுப்படுத்தப் படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க அதிபர் கொலை முயற்சியை அடுத்தே துப்பாக்கி பாவனைக்கு கட்டுப்பாடு விதிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

துப்பாக்கி பாவனையைக் கட்டுப்படுத்துவதை பதவியிலிருந்த போதே எதிர்த்து வந்த முன்னாள் ஜனாதிபதி திரு. ஜெரால்ட் போர்ட் இதனைக் கட்டுப்படுத்தக் கூடாதுஎன்று மீண்டும் தெரிவித்துள்ளார். (இ)

### றீகனைச் சுட்டவர்

## குற்றம் செய்பவர்களை தாங்களே தண்டிக்கும் இயக்க உறுப்பினர்

### நீதிமன்றத்தில் மௌனம் சாதித்தாராம்

வாஷிங்டன், ஏப் 1

அமெரிக்க அதிபர் திரு. றீகன் கொலைமுயற்சி தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட 25 வயது நபரான ஜோன் கிங்ஸ்லி நேற்றிரவு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுக்கவோ ஏற்கவோ இல்லை; பதிலாக தொடர்ந்து மௌனமே சாதித்தார்.

நீதிமன்றத்தில் இவர்மீதான விசாரணை பத்து நிமிடங்கள் நடைபெற்றபோதிலும் இவர் எதுவும் கூறவில்லை.

லொஸ்ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த வலதுசாரி தீவிரவாதக் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவர் என்றும் இந்த தீவிரவாத இயக்கம் குற்றம் இழைப்பவர்களைக் கண்டுபிடித்து தாங்களே தண்டனை அளிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்துவருகிறதுஎன்றும் தெரிவிக்கப்பட்டது.

உபஜனாதிபதி திரு றீகனைக் கொலைசெய்வதற்கு கிங்ஸ்லி வெளிநாடு ஒன்றின் ஏஜன்டாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிசார் தற்போது சந்தேகிக்கின்றனர். (இ)

### ஹரிஜன மாணவருக்கு இலவச பயணம்

புதுச்சேரி, ஏப். 1

புதுச்சேரியில் ஹரிஜன மாணவர்களுக்கு 200 கிலோமீட்டர் வரை அரசாங்க பஸ்களில் இலவசமாக பிரயாணம் செய்யக்கூடிய வசதியை பாண்டிச்சேரி அரசு செய்து கொடுத்துள்ளது. (இ)

### ஆப்கான் ராஜிய பிரதிநிதிகள் இந்தியாவிலிருந்து திடீரென வெளியேறினர்

புதுடில்லி, ஏப்ரல் 1

புதுடில்லியில் இருந்த ஆப்கானிஸ்தான் ராஜியப் பிரதிநிதிகள் திடீரென இரகசியமாக நாட்டை விட்டு வெளியேறி வேறு நாட்டுக்குச் சென்றுவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய பின்னரே இந்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டதாம். (இ)

### பொலிஸ் சுட்டதில் 3 பேர் பலி!

கல்கத்தா, ஏப். 1

கல்கத்தாவில் நடைபெற்ற இந்திராகாங்கிரஸ் பேரணி ஒன்றின்மீது பொலிசார் சுட்டதில் 3 பேர் பலியானார்கள்; 10 பேர் காயமடைந்தனர். (இ)

### 31 ஆசிரியர்கள் கைது

சென்னை, ஏப். 1

தமிழக செயலகம்முன் நேற்று மறியல்செய்யமுயன்ற 31 ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டனர். (இ)

### படுக்கையில் இருந்தபடியே

# மசோதாஒன்றில் றீகன் கைச்சாத்திட்டார்

வாஷிங்டன், ஏப்ரல் 1

துப்பாக்கிச்சூடுபட்ட அமெரிக்க அதிபர் நேற்று படுக்கையிலிருந்தவாறே முக்கிய மசோதா ஒன்றில் கைச்சாத்திட்டார் என்றும் அவர் குணமடைந்துவருகிறார் என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது காயமுற்ற தமது பத்திரிகைச் செயலாளர் திரு. பிரெடியின் உடல்நிலை குறித்த திரு றீகன் இன்று காலை முதற்தடவையாகக் கேட்டறிந்துகொண்டார்.

இதேசமயம், அடுத்த மாதம் அமெரிக்காவுக்கு வரும் மெக்ஸிக்கோ ஜனாதிபதியை திரு றீகன் முன்னைய திட்டபடி சந்தித்து பேச்சு நடத்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### மாஜி சட்டமா அதிபருக்கு 5 வருடகடுங்காவல்

இஸ்லாமாபாத் ஏப் 1.

முன்னாள் பாகிஸ்தான் சட்டமா அதிபருக்கு பாகிஸ்தான் விசேட நீதிமன்றம் நேற்று 5 வருட கடுங்காவல் தண்டனை விதித்தது. இவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

1977ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது முன்னாள் சட்டமா அதிபர் ஜனப் யாஹ்யா பக்தியார் தாம் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. (இ)

### இந்தோனேஷியவிமானக்கடத்தல்

## 4 கடத்தல் காரர்களே மீட்பின்போது பலியாகினர்!

பாங்கொக், ஏப்ரல் 1

இந்தோனேஷிய விமானத்தைக் கடத்தியவர்கள் அவ்விமானத்தை விமானிகள் களைப்படைந்திருந்த நிலையிலும்கூட வேறு இடத்திற்குக் கொண்டுசெல்லப்போவதாக அறிவித்திருந்தையடுத்தே கடந்த இரவு திடீர்த்தாக்குதல் நடத்தி விமானத்தையும் பயணிகளையும் மீட்கத் தீர்மானித்துத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தாய்லாந்து அதிகாரி ஒருவர் கூறினார்.

இத்தாக்குதலின்போது நாலு கடத்தல்காரர்கள் மட்டுமே கொலைசெய்யப்பட்டனர் என்றும் ஒருவர் ஆஸ்பத்திரியில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார் என்றும் கூறிய அந்த அதிகாரி, கடத்தல்காரர் 5 பேரும் கொலை செய்யப்பட்டனர் என முன்னர் இந்தோனேஷியா அறிவித்திருந்தது தவறு என்றும் தெரிவித்தார். (இ)

## 'சதிமுயற்சியில் மவுண்பேட்டன் சம்பந்தப்படவில்லை'

### — ஹரோல்ட் வில்சன்

லண்டன், ஏப்ரல் 1

பிரதம மந்திரியாகத் தான் பதவிவகித்த காலத்தில் தனது அரசாங்கத்தைச் சதி மூலம் கவிழ்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது உண்மையென்று முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் சேர் ஹரோல்ட் வில்சன் தெரிவித்துள்ளார்.

ஆனால், இதற்குப் பின்னணியாக காலஞ்சென்ற ஏயர் மார்ஷல் மவுண்ட்பேட்டன் இருந்தாரென்பதை சேர் ஹரோல்ட் வில்சன் மறுத்துள்ளார்.

ஹரோல்ட் வில்சனின் தொழிற்கட்சி அரசாங்கத்திற்கெதிராக 1968-ம் ஆண்டில் சதி மேற்கொள்ளப்பட்டதாக பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது. மவுண்ட்பேட்டன் பிரபுவே இச்சதித்திட்டத்தை வகுத்துள்ளார் என்று சேர் ஹரோல்ட் வில்சனின் முன்னாள் அரசியல் செயலாளர் லேடி வல்கொண்டர் கூறியதாக இப்பத்திரிகைச் செய்தி குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்கான சதித்திட்டம்பற்றி இரு பெரும் பத்திரிகையாளர்களுடன் மவுண்ட்பேட்டன் பிரபு கலந்துரையாடியது உண்மையென்றும் அது தெரிவித்துள்ளது.

இச்செய்தி மவுண்ட்பேட்டன் பிரபுவிற்கு இழுக்கை ஏற்படுத்துவதாகவுள்ளது என்று ஹரோல்ட் வில்சன் கூறியுள்ளார்.

மவுண்ட்பேட்டன் பிரபு இரண்டாவது உலக யுத்தத்தின்போது பிரிட்டிஷ் தளபதியாகவும் கடமையாற்றியது தெரிந்ததே. இவர் 1979-ம் ஆண்டு அயர்லாந்துக் கொரில்லாக்களினால் படுகொலைசெய்யப்பட்டார். (வெ)

### எம். ஜி. ஆர். கோலாலம்பூர் செல்கிறார்

சென்னை ஏப். 1

கோலாலம்பூரில் இம்மாதம் 14ம் திகதி நடைபெறும் உலக தெலுங்கு மகாநாட்டில் தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் கலந்துகொள்கிறார்.

ஆந்திர முதல்வர் திரு. பி. அஞ்சையாவின் அழைப்பின் பேரிலேயே திரு. இராமச்சந்திரன் இம் மகாநாட்டுக்குச் செல்கிறார். (இ)

### இந்திய எம். பி.க்களை சீன அரசு அழைத்துள்ளது

புதுடில்லி ஏப் 1.

இந்தியபாராளுமன்றஉறுப்பினர் நல்லெண்ணைக்குழுஒன்றை சீனாவுக்கு அனுப்பி வைக்க சீன அரசு இந்திய அரசைக் கேட்டுள்ளது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார். (இ)

### பாக். ஆயுத உதவி

## அமெரிக்காவுடன் பேச்சு நடத்த இந்தியா தயார்

### லோகசபையில் வெளிநாட்டுஅமைச்சர்

புதுடில்லி, எப்ரல் 1

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுத விநியோகம் குறித்து அமெரிக்காவுடன்பேச்சுநடத்த இந்தியா தயாராக இருக்கிறது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் நேற்று இந்திய லோகசபையில் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்கினால் இந்து சமுத்திரப் பகுதியில் புதிய பதட்டநிலை ஏற்பட அது வழிவகுக்கும் என்றும் இப்பகுதியில் சகஜநிலையை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் சகல முயற்சிகளையும் இது சீர்குலைத்துவிடும் என்றும் திரு. நரசிம்மராவ் கூறினார்.

இது விஷயம் குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க்குடன் பேச்சு நடத்துமாறு அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதுவர் பணிக்கப்பட்டுள்ளார் என்றும் திரு. ராவ் கூறினார்.

#### இந்திய அதிகாரி அமெரிக்கா செல்கிறார்

இதேவேளையில், பாகிஸ்தானுக்கு ஆயுதஉதவி வழங்குவது குறித்து அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுநடத்துவதற்கு இந்திய வெளியுறவு காரியதரிசி திரு. கொன் ஸல்வே இம்மாதம் 16 அல்லது 17ம் திகதி அமெரிக்கா செல்வார் என வெளியுறவு இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ)

### தமிழகத்தில்

### மருத்துவ பல்கலைக்கழகம்

சென்னை, ஏப். 1

தமிழ்நாட்டில் மருத்துவ பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பது குறித்து தமிழக அரசு ஆலோசித்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

**மணிவாக்கு**

சொன்ன சொல் தவறுதவன் வீரன்.

—அருள் விருந்து

# நமது நோக்கு

## அமெரிக்க ஜனாதிபதியின் அருந்தப்பு

ஜனாதிபதி றீகன் கொலை முயற்சி எமக்குப் பேரதிர்ச்சியாகவிருந்ததில் விசேட காரணம் உண்டு.

மூந்தநாள் றீகனின் திருவிளையாடல்கள் என்ற தலைப்பில் அவருடைய அரசியல் நடவடிக்கைகளில் சிலவற்றைக் கண்டிக்க நேரிட்டது. இன்று அவருடைய உயிர் மயிரிழையில் தப்பியது என்ற செய்தி எமக்கு சிறப்பு மகிழ்ச்சியளித்தது நியாயமே.

ஜனாதிபதி றீகனும் அவருடைய பத்திரிகைச் செயலாளரும் மிகக்கொடூரமான துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிர் தட்பியது, தெய்வத்தின் திருவருளாலே என்பதை அமெரிக்கர்கள் முற்றாக நம்புகின்றனர். அதே சமயம் இக்கொடிய சம்பவம் ஜனாதிபதி தேர்வு தொடர்பாக 140 வருடங்களாக அமெரிக்க மக்களிடையே நிலவிவரும் ஒரு சாபக்கேடு பற்றிய நம்பிக்கையை இறுக்கியுள்ளது.

சூடுபட்ட றீகன், சத்திர சிகிச்சையின் திறமையால் குணமடைந்துவருகிறார். நின்றும் இருந்தும் நிர்வாகத்தைத் திறம்பட நடத்திய ஜனாதிபதி, இன்று கிடந்தும் நடத்த ஆரம்பித்துவிட்டார். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் அற்புத நிலைமையை இது விளக்குகின்றது. எனவே சாபக்கேடு பற்றியோ சோதிடக் கருத்துக்கள் பற்றியோ எவ்வித நிரந்தரமான நம்பிக்கையும் இக்கால விவகாரங்களுக்குப் பலனளிப்பது சந்தேகமாகும்.

அரசியல் வேறுபாடுகள், உள்நாட்டு, வெளிநாட்டுப் பூசல்கள், பிணக்குகள் எவையானாலும் தனிமனிதரின்-அவர் எவராயினும் சரி-கொலையால் தீர்க்கப் படமாட்டாவென்பது வரலாற்றின் தெளிந்த பாடம். ஜனாதிபதி கென்னடி, மகாத்மா காந்தி, எங்கள் நாட்டில் பண்டாரநாயக்கா போன்ற தலைவர்களின் அகால மரணத்தால் சில மாறுதல்கள் ஏற்பட்டது உண்மை. இருந்தும் அவர்களுடைய செல்வாக்கு-விசேடமாக அரசியல்துறையில்-தொடர்ந்து தொழிற்படுவது அவர்களுடைய ஆளுமையிலும் மக்கள் இயக்கத்திலுமே தங்கியிருக்கிறது.

இந்த உண்மை தீவிரவாதிகளுக்கு எட்டாது. அதிகாரம் துப்பாக்கிமுனையில் பிறக்கின்றதாக அவர்கள் நம்புகின்றனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கும் தாளாத றீகன் உயிர் தப்பினார் என்ற நற்செய்தி அமெரிக்க மக்களுக்கு எவ்வளவு உற்சாகமளிக்கிறதோ அவ்வளவு உற்சாகம் நாகரிக உலகுக்கு உண்டென்பது கொந்தளிக்கும் உலகிற்கு மீட்சியளிக்கவல்லது.

## காலஞ் சென்ற திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை

வாழ்வின் மத்தியில் மரணம் உள்ளிடுகின்றது. மூதறிஞர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் பிறந்த தினவிழா வன்று தமிழ்நாட்டுத் தலைநகரில் கோப்பாய் எம். பி. திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை காலமானார். இது நாட்டுக்கும் சிறப்பாகத் தமிழ்மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

1957ம் ஆண்டு மறைந்த கோப்பாய் எம். பி. திரு கு. வன்னியசிங்கத்தை நினைவு கூரப்பல பொதுப் பண்புகள் உண்டு. அரசியல் நேர்மை, கொள்கை உறுதி, அஞ்சா நெஞ்சம் போன்ற குணங்கள் இவ்விரு தலைவர்களுக்கும் ஒற்றுமையானவை.

அரசியல் எதிர்ப்பில் தலைநிமிர்ந்து நின்ற அமரர் வன்னியசிங்கம் குண்டர்களால் தாக்குண்டு நோய்வாய்ப் பட்டது அரைவயதில் மரணமடைவதற்குக் காரணமானது. அதே மாதிரி தமிழ்மக்களின் எதிர்கால வாழ்வுபற்றி ஆழ்ந்த கவலை கொண்ட திரு. கதிரவேலுப்பிள்ளை இருதய நோய்க்குப் பலியானது நூதனமல்ல. அஞ்சாமையைச் சொல்லிலும் செயலிலும் நிரூபித்து வந்தவர் திரு. வன்னியசிங்கம். சாந்தமும் சொற்சாதுரியமும் நிறைந்தவர் திரு. கதிரவேலுப்பிள்ளை.

அமரர் வன்னியசிங்கத்துக்கு அஞ்சலி செய்ய வந்த பாராளுமன்றக் கோஷ்டியின் தலைவர் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா அன்னாரின் உறுதிகொண்ட கொள்கையையும் தேசப்பற்றையும் பாராட்டினது ஞாபகம். அதே போல் நாமும் இன்று மறைந்த தலைவரின் அரசியல் நேர்மையையும் சிந்தனைத் திறமையையும் பாராட்டக்கடமைப் பட்டுள்ளோம்.

அடுத்த தேர்தலை நினைவிற் கொள்பவன் அரசியல்வாதி. அடுத்த சந்ததியை நினைவிற் கொள்பவன் அரசியல் ஞானி. கருத்துவேறுபாடுகள் எவையாகினும் உள்ளத்தால் பொய்யாதொழுகும் தலைவன் மக்கள் உள்ளத்துள் என்றும் உளன்.

### மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான்- மானம்பராய் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் இம்மாதம் 9ம் திகதி வியாழன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 21ம் திகதி உற்சவம் முடிவடைகிறது. 17ம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 18ம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் 20ம் திகதி திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (இ)

### சுண்டிக்குளம் கொலைவழக்கு

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளம் கொலை வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் எடுக்கப்பட்டு இன்று காலை வரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

# ஒரு நல்ல மனிதரை தமிழினம் இழந்துவிட்டது!

கர்மவீரர் அமரர் வன்னியசிங்கத்தின் இடத்தை நிரப்பிய சிந்தனைச் சிற்பி - விடுதலை வீரர் - தமிழினத் தலைவர் அமரராகிவிட்டார்!

தமிழ் பேசும் இனம், ஒரு தன்னிகரற்ற தலைவர், கதிரவேலுப்பிள்ளை அவர்களை இழந்து தவிக்கிறது!

**"இலங்கை ஒரு நாடு அல்ல அது ஒரு தீவு, அந்தத் தீவிலே இரண்டு நாடுகள். அவை சிறிலங்கா, தமிழீழம்" என்ற கருத்தைத் தெட்டத்தெளிவாக பாராளுமன்றத்திலே எடுத்துரைத்த அந்தக் குரல் மங்கிவிட்டது!**

உண்மை.

விடுதலை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டபோதிலும், அவர் "சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்" என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்.

சிங்களம்மட்டும் சட்டத்தை சட்டப் புத்தகத்திலிருந்து அகற்றுவதில் வெற்றி கண்ட அரசாங்க எழுதுவினைஞர் சங்க உறுப்பினர்கள்; கடந்த வருடம் நடைபெற்ற வேலை நிறுத்தம் காரணமாக, வேலையின்றித் தவிப்பது யாவரும் அறிந்ததே. தற்போதைய பிரதமர் என்னுடன் ஒரே சட்டடத்தில் நான்கு வருடகாலம் இருந்து பழகிய காரணத்தால், அந்தச் சிநேகிதத்தைக் கொண்டு, பிரதமர் யாழ். நகரில் இருந்த போது, வேலை இழந்தவர்கள் சார்பில் சென்று அவர்களின் துயர் நிலையை விளக்கி தீர்வு காணும்படி என்னை நீதிமன்றத்திலிருந்து வழியனுப்பிவிட்டு எனது வழக்குகளை அமரர் கதிரவேலுப்பிள்ளை கவனித்தது எனக்கு இன்னமும் பசுமையாக இருந்தாலும் பலருக்கு இது தெரியாமல் இருக்கலாம்.

இதய சுத்தியுடன் எமது மனச்சாட்சிக்கு ஏற்ப நாம் நடந்துகொள்ளவேண்டுமே ஒழிய, மற்றவர்கள் புகழ்வார்களோ இகழ்வார்களோ என்ற காரணத்துக்காக எமது கடமையிலிருந்து மாறக்கூடாது என்பதே அவரது நடைமுறைக் கொள்கையாகும்.

சட்டத்துறையில் அவரது ஆழ்ந்த - தெளிந்த கருத்துக்களைப் பற்றி புகழாத நீதிதிகளே இல்லை என்று கூறலாம்.

வறியவர்கள்கூட அவரது வீட்டுக்குச் சென்று, தங்களது வழக்கு சம்பந்தமாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்குக்கூட எவ்வித கஷ்டமும் இருக்கவில்லை.

சுதந்திரதாகம் உள்ளவர்கள் மட்டுமல்ல; சட்டஆலோசனை கோரும் வறியமக்களுக்கும்கூட இவரது மறைவு பேரிழப்பாகும்!

இவ்வளவு குணங்களையும், அறிவையும், ஆற்றலையும் கொண்ட இம்மகான்; பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். எதனையும் சகிக்கும் தன்மை வாய்ந்தவர்.

தமிழினத்துக்குச் சேவை செய்வதால் தனது ஆயுளையே சுருக்க வேண்டி நேரிடும் என்று தெரிந்தும்கூட தயங்காது உழைத்த தியாகி அவர்!

இப்படிப்பட்ட ஒரு விடுதலை வீரர் - சிந்தனைச்சிற்பி - சிறந்த சட்ட வல்லுநர் - தமிழ் அறிஞர்; இதற்கு எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு நல்ல மனிதரை இழந்து தவிக்கும் மக்களுக்கு ஆறுதல் கொடுக்கக் கூடியவர் இறைவன் ஒருவரே தான!

அவருக்காக நாம் செலுத்தும் அஞ்சலி; அவர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து நிறைவேற்றுவதேயாகும்.

### சட்டத்தரணி இராமலிங்கம் பாலசுப்பிரமணியம்

(தலைவர்-யாழ். ரோட்டரிக்கழகம்- செயலாளர்-யாழ். சட்டத்தரணிகள் சங்கம்)

தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கை ஒரு பிரிவினைக் கோரிக்கை அல்ல. தாம் மீண்டும் பெற்ற இறைமையைப் பிரயோகிக்க முயற்சிப்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாகும் என்று அவர் பலமுறை எடுத்துரைத்தது... இன்றும் எமது காதுகளில் ஒலிக்கிறது!

அமரர் திருச்செல்வம் ட்ரயல் அட்பார் வழக்கு மூலம் உலகறியச் செய்த இக்கோட்பாட்டை தெட்டத்தெளிவாக தமிழ் மக்களுக்கும் பிற நாட்டவர்களுக்கும் எடுத்துரைத்த பெருமை அமரர் கதிரவேலுப்பிள்ளையையே சாரும்.

**மறுகட்சியில் இருப்பவர்கள்கூட இக்கொள்கையை ஏற்கக்கூடிய சூழ்நிலையை அவர் ஆரம்பித்திருந்த இவ்வேளையில், சடுதியாக இவர் எம்மைவிட்டு நீங்கியது தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும்.**

அவரது உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது என்று பல வைத்திய நிபுணர்கள் கூறிய பின்னரும்கூட, அவர், தமிழ் மக்களின் இன்றைய நிலையையும் விடுதலை இயக்கத்தின் தளர்ச்சியையும் பற்றி ஆழ்ந்த கவலையுடன் சிந்தித்து வந்ததே அவரது சடுதியானமறைவுக்குக் காரணமாகும் என்று கூறலாம்.

அவர் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்கூட இவ்விடயங்கள்பற்றி என்னுடன் அளவளாவியபோது விடுதலையை விரும்பாத ஒரு தமிழ் மகனும் இல்லை என்றும், சிற்சில காரணங்களுக்காகவும், அவரவர் சூழ்நிலை காரணமாகவும் வேறு ஸ்தாபனங்களை ஆதரித்தும், ஆதரிப்பதுபோல் காட்டியும் இருந்தபோதிலும்; விடுதலை இயக்கம் பலமடைந்ததும், அவர்கள் ஓர் அணியில் திரள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை என்றும் எனவே தமிழ் மக்கள் ஒருவரை ஒருவர் தாக்கியோ ஒற்றுமையைக் குலைக்கவோ கூடாது என்றும் உறுதியாகக் கூறியிருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றி சில எதிர்ப்புக்கள் வந்து, வேறு ஒரு அணி உருவாக வேண்டுமென்று முயற்சி செய்தவர்கள் இவரைச் சந்தித்தபோது; நீங்கள் குறைபாடுகளை எடுத்துச் சொல்லுங்கள், ஆனால் மாற்று இயக்கம் ஆரம்பிக்கும் நோக்கத்தைக் கைவிடுங்கள்" என்று அவர்களுக்கு பலமுறை கூறிய காரணத்தினால் தான், வேறு ஒரு புதிய அணியோ அல்லது இயக்கமோ ஆரம்பிக்கமுடியாத சூழ்நிலை உண்டாயிற்று. இது

## "மனித உரிமைகளுக்காக பாடுபட்டவர்"

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

"இன ஒடுக்குதலுக்கும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 1979-ம் ஆண்டில் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகால நிலையின்போது நடைபெற்ற மனித உரிமை மீறுதல்களை அம்பலப்படுத்துவதற்காகத் தேற்றுவிக்கப்பட்ட எமது இயக்கமான "இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்" (வட பிராந்தியம்) இத்துறையில் எடுத்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் எமக்குப் பக்கத்துணையாக விளங்கியவர் திரு சி கதிரவேலுப்பிள்ளை நாம் கேளாமலே எம்மை நாடிவந்து பாதிக்கப்பட்டவர்; சம்பந்தப்பட்ட தகவல்களைத் தந்து உதவியதோடு, சகல உதவியும் செய்திருந்தவர் அன்னார்.

"மனித உரிமைகள் நிலைபெறவேண்டும், சித்திரவதைகள் அம்பலப்படுத்தப்பட வேண்டும் என்பதில் நாட்டமுடைய அனைவருக்கும் திரு. கதிரவேலுப்பிள்ளையின் மரணம் பெரும் இழப்பாகும்.

"அன்னாரது துணைவியாருக்கும் குடும்பத்தினருக்கும் அவர் சார்ந்த பக்கத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்."

- "இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்" (வட பிராந்தியம்)

### ஈடுசெய்யமுடியாத இழப்பு

'தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்து உழைத்த சிந்தனைச் செல்வனும், கோப்பாய்க்கோமானுமாகிய திரு. சி கதிரவேலுப்பிள்ளையின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைகிறேன். இவரது பிரிவு தமிழ்மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.'

இவ்வாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளைத் தலைவர் திரு த. நமசிவாயம் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### விதியே, கதிர்வேலை ஏன்பறித்தாய்?

கதியின்றி வாடுகின்ற கன்னித்தமிழ் இனத்தின்
பதியான தமிழ்ஈழ விடுதலைக்குப் போராடும்
கதிர்வேலாய்க் கூட்டணியின் கரங்களிலே
திகழ்ந்த எங்கள்
கதிர்வேலைக் கண்ணில்லா விதியேநீ! ஏன்பறித்தாய்!

--வளலாயூர் செ. சிவசம்பு

## அரசியல் அபூர்

திரு. சிவசப்பிரமண
கதிரவேலுப்பிள்ளை ஓர்
சியல்வாதி.

அரசியல் வாதிகளில் அ
வமானவர்!

அரசியல் வாதிகள் என்
தமது நாட்டில் ஒரு வே
டுக்காக என்ன வெள்
செய்யமுடியுமோ அத்
யையும் செய்வதற்கு ஆ
மாக நிற்பர்.

திரு. கதிரவேலுப்பிள்
அரசியல்வாதிதான் ஆ
வோட்டுக்காக அவர் ே
செய்ததில்லை; ஆலவாதிப்
டதுமில்லை.

சிலவருடங்களுக்கு முன்
ஒரு நாள் நடந்த நிகழ
இது.

அப்போது திரு. கதிர
லுப்பிள்ளை நீராவியடியில்
லூரி வீதியில் வசித்து
தார். அப்போதும் அ
கோப்பாய் எம். பி. யாகஇ
தார்.

காலை சுமாரெட்டு மணி
ருக்கும் ஒரு சிறுவன் உட்
பதுப்பேர்... வந்தது
விட்டுக்கு ...
வர்களை இருக்கச்சொ
என்ன விஷயம் என்று
டார் திரு. கதிரவேலுப்பிள்

கோப்பாய்த் தொகுதி
லுள்ள ஒருபாடசாலை
படிக்கும் மாணவனை (அ
சிறுவன்) பள்ளிக்கூடத்
தலைமை ஆசிரியர் பகிஷ்க
ஒழுங்கையில் வைத்துத் தி
மாறாக அடித்து விட்டார்

அது வேண்டுமென்
சொந்தக் கோபதாபத்
தீர்க்கும் பழிவாங்கும் செ
என்பது இங்கு வந்தவர்
தெரிவித்த கருத்து.

அவர்கள் விபரம்
வர்ணித்துச் சொன்னவற்
பெல்லாம் அமைதியாகக் கே
டுக் கொண்டிருந்த திரு. க
வேலுப்பிள்ளை "இப்படி அ
வழியில் வைத்து அடித்
தால் நீங்கள் முதலில்பொ
க்குப்போயல்லவா புகார் செ
திருக்கவேண்டும்! இ
ஏன் வந்த நீங்கள்?"

இப்படி அவர் கேட்ட
தூதுகோஷ்டியில் வந்த

## மூத்த தமிழ் தலைவர்

"உலகின் ஆறுகோடி
தமிழ் மக்களுக்கும் தாய
இல்லாதே என்ற ஏக்
கைதப்போக்குவதற்காக தந்
செல்வாவின் கனவில் உ
பான இறைமையுள்ள, சு
திர சோஷலிச தமிழீழ
கனவை நனவாக்குவதற்
முனைப்புடன் பாடுபட
உழைத்து வந்த ஒரு மூ
தமிழ்த் தலைவரைத் தமி
குலம் காலனுக்குப்
கொடுத்துத் தவித்துநிற்கிற

தேர்தல்களில் வாக்கு
நழுவிடக்கூடுமே என்ற
யினால் தீண்டாமை ப
ஏனையோர் அதிகம் அலட்
கொள்ளாதிருந்த காலகட்
திலேயே வெளிப்படையா
தீண்டாமையைச் சாடப் பு
பட்டவர் அமரர் கதிரவே
பிள்ளை. வழிபாட்டிடங்க
தீண்டத்தகாதாரென ஒது
பட்ட மக்கள் நுழைய
யாது தடுக்கப்பட்ட சந்த
பங்களில் அவர்களுடை
மனித உரிமைக்காக நீதி
றங்களிலும் ... வாத
வெற்றி சேர்த்துத் த
பெரும் குலத்தினர் என
அமரர் கதிரவேலுப்பிள்
ஆவர்.

திரு. கதிரவேலுப்பிள்ளை
இறுதி விருப்பமான தமி
விடுதலையைத் துரிதப்படுத்
பணிக்கு நம்மை அர்ப்பண
பது ஒன்றே அமரருக்கு ந
செய்யக்கூடிய கைமாறாகும்

பி. எஸ் சேவி
(துணை முதல்
யாழ்ப்பாண

## ல் வாதிகளில் பூர்வமானவர்!

ளின் முகம் சுருங்கி விட்டது.

அந்தத் தூது கோஷ்டியில் ஆசிரியர்களும் இரண்டொருவர் இருந்தனர்.

"பொலிசுக்குப் போயிருக்கலாம் தான் ஆனால் உங்களைக் கொண்டு வித்தியாதிபதியிடம் புகார் செய்யலாமென்று வந்தோம்" என்று தூதுகோஷ்டியில் வந்தவர்கள் தெரிவித்தனர்.

வித்தியாதிபதியிடம் தெரிவிக்கலாம். அது ஒன்றும் பெரிய விஷயமில்லை என்று பதிலளித்த திரு. கதிரவேலுப்பிள்ளை "நீங்கள் இங்கே வந்தபடியால் வித்தியாதிபதியிடம் போய்ப் புகார் செய்துவிட்டுப் போங்கள்; நான் பிறகு போய் அவரைச் சந்தித்துப் பேசுகிறேன்" என்று கூறிமுடித்தார்.

## ஊர்சுற்றி

தூதுகோஷ்டியில் வந்தவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லையானாலும் வேறுவழியின்றி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இந்த நிகழ்ச்சியின் போது நான் வேறொரு அலுவலாகத் திரு. கதிரவேலுப்பிள்ளையின் வீட்டில் நின்றேன்.

இவருக்கும் அரசியலுக்கும் வெகுதூரம் என்று நான் முடிவு கட்டிக்கொண்டேன்.

பல அரசியல் வாதிகளுடன் பழகியிருக்கிறேன். அன்றுடம் அந்த அரசியல்வாதிகளின் வீடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அவதானித்திருக்கிறேன்.

திரு. கதிரவேலுப்பிள்ளையைச் சந்திக்க வந்த தூது கோஷ்டி வேறொரு அரசியல் வாதியின் வீட்டுக்குச் சென்றிருந்தால் அந்த நிமிஷமே பொலிஸ் நிலையத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உடன் நடவடிக்கை எடுக்குமாறும் தூதுகோஷ்டியை நேரில் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்திருப்பார்,

அதுமட்டுமல்ல அந்தத் தூது கோஷ்டியையே நேரில் வித்தியாதிபதியிடம் அழைத்துச் சென்றிருப்பார்.


அவர்களுக்குப் பரமதிருப்தி ஏற்பட்டிருக்கும்; பலரிடம் போய் எம். பி. யைப் பற்றி வெகுவாகப் பாராட்டியும் சொல்லியிருப்பர்.

அடுத்த தேர்தலில் நிச்சயமாக மேலும் சிலவாக்குகள் கிடைக்குமென்று எதிர் பார்த்திருக்கலாம்.

திரு. கதிரவேலுப்பிள்ளை நண் பகலில் வடமாநில வித்தியாதிபதியைச் சென்று சந்தித்தது உண்மை தான் ஆனால்] அவர் வோட்டுக்காக அவரைச் சந்திக்கவில்லையென்பது நிச்சயம்.

திரு: கதிரவேலுப்பிள்ளை வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்பட்டது கிடையாது.

கொள்கைக்காகவும் இலட்சியத்துக்காகவுமே வாழ்ந்தார். தாம் சார்ந்த இயக்கத்தின் கட்டுக்கோப்புக் குலைந்து விடக்கூடாதென்பதிலும் தமிழ்மக்களின் ஐக்கியத்திலும் அவர் மிகவும் கவனமாக இருந்தார்.



தமிழரசுக்கட்சியிலும் சரி, தமிழர் விடுதலைககூட்டணியிலும் சரி மேலிடத்தில் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்ட சமயங்களிலெல்லாம் நிதானத்தை இழக்காமல் செயல்பட்டார். அவருக்கு முதல் தடவையாக இருதய நோய் வந்ததே இப்படியானதொரு கருத்துவேறுபாடு ஏற்பட்டது தான் காரணமாகும்.

இளைஞர்பேரவைக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப்பீடத்துக்குமிடையே கருத்துவேறுபாடு பகிரங்கமாக வெளிப்பட்ட நேரத்தில் இயக்கத்தைச் சீர்குலையவிட்டுவிடக்கூடாது என்று இளைஞர்களுக்கு அறிவுறுத்தியவர் திரு. கதிரவேலுப்பிள்ளை.

சென்ற பொதுத்தேர்தல் சமயத்தில் காங்கேசன்துறைத் தொகுதியில் யாரை நிறுத்துவது என்ற பிரச்னையில் இருவருக்கிடையில் சிறிது மனக்கசப்பு ஏற்பட்டபோது அதையும் சமாளித்து நிதானத்துடன் செயல்பட்டு தாம் சார்ந்த இயக்கம் சீர்குலையாமல் தடுத்துக் காப்பாற்றியவர் திரு. கதிரவேலுப்பிள்ளை.

சுறுசுறுப்பில்லாதவர் என்று கூட்டணியைச் சார்ந்த சிலர் அவரைக் குறை கூறுவதுண்டு. ஆனால் அவரின் சிந்தனைத் திறன் கண்டுவியக்காதவர் வெகு சிலரே.

தமிழர்கள் பிரிந்துசெல்வது தான் ஒரே வழி என்று தமிழர் விடுதலைக்கூட்டணியினர் பிரசாரம்செய்யத் தொடங்கினர். இதைப் பாராளுமன்றத்திலும் கூட்டணியினர் பகிரங்கமாகக் கூறத் தொடங்கினர்.

இச்சமயத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் பிரிவினை கோருவதையும் பிரிவினை பற்றிப் பேசுவதையும் தடை செய்வதற்குச் சட்டம் கொண்டுவரப்படவேண்டுமென்று கூறியதுடன் அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டனர். இன்றுங்கூட பிரிவினைக் கோரிக்கையைத் தடுக்கச் சட்டம் கொண்டுவரப்படவேண்டுமென்று சிலர் கூறிவருகின்றனர்.

பிரிவினைத் தடைச்சட்டம் பற்றிய குரல் எழுந்ததும் திரு. கதிரவேலுப்பிள்ளை கூட்டணியின் கோரிக்கைக்கு புதிய வியாக்கியானம் அளித்துத் திசையையே திருப்பிவிட்டார்.

"நாங்கள் பிரிவினை கேட்கவில்லை. பிரிட்டிஷார் தமது நிர்வாக வசதிக்காக மாவட்டங்களை உருவாக்கி வைத்தனர். அதற்கு முன்னர் தமிழ் ஈழம், சிங்கள ஈழம் என்று இரண்டு நாடுகளே இங்கிருந்தன. நாங்கள் இப்போது கேட்பது முன்னர் இருந்த தமிழ் ஈழத்தையே" என்று பாராளுமன்றத்திலேயே திரு. கதிரவேலுப்பிள்ளை அடித்துக் கூறினார்.

இதன்பின் பிரிவினைத் தடைச்சட்டக் குரல் வலிவிழந்து விட்டது!

பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதங்களிலும் திரு. கதிரவேலுப்பிள்ளையின் வாதம் தனித்துவம் பெற்றது.

"நீங்கள் வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரித்து தமிழ்ப்பகுதிகள் பற்றியும் அதிக சிரமம் எடுத்துக் கொள்கிறீர்கள். உங்களுக்கு இந்தச் சிரமமே தேவையில்லை எங்களுக்காக நீங்கள் ஏன் கஷ்டப் படுகிறீர்கள்? எங்கள் பொருளாதாரத்தையும் எங்கள் பகுதி அபிவிருத்தியையும் எங்களிடமே விட்டுவிடுங்கள்" என்பது திரு கதிரவேலுப்பிள்ளையின் வாதம்.

கோப்பாய்த் தொகுதி சாதி பார்க்கும் மனப்பான்மை கொண்டவர்கள் அதிகமாக உள்ள தொகுதி.

சாதிப்பாகுபாடு சம்பந்தமாக மாவிட்டபுரத்தில் நடந்த போராட்டத்தில வேறொரு அரசியல் இயக்கமே ஈடுபட்டிருந்தபோதிலும் அந்த வழக்குகளில் அவர்களுக்காக ஏற்பட்டு வெற்றிதேடிக்கொடுத்தவர் திரு. கதிரவேலுப்பிள்ளை.

இந்த வழக்குகளில் திரு. கதிரவேலுப்பிள்ளை ஏதிபடுவதால் அடுத்த தேர்தலில் அவர் தோல்வியையே சந்திக்க நேரிடுமென்று பலரும் எச்சரித்தனர்.

திரு. கதிரவேலுப்பிள்ளை வோட்டுக்காக வாழவில்லை, கொள்கைக்காக, [இலட்சியத்துக்காக வாழந்தார், அதற்காக எதையுமே தாங்கிக் கொண்டார்.

## அகிம்சைகாத்த மைந்தனே!

சிந்தனைச் செல்வா! கோப்பாய்த்
 தென்றலே! அகிம்சை காத்த
மைந்தனே தமிழர் நெஞ்சில்
 மாபெரும் புரட்சி செய்த
தந்தை செல்வாவைப் போன்ற
 தநயனே பிரிந்திட் டாயோ
செந்தமிழ் மக்கள் என்ன.
 தீமைதான் புரிந்திட்டாரோ?

--காரை. செ. சுந்தரம்பிள்ளை

## 'சிந்தனைச்சிற்பி' கதிரவேலுப்பிள்ளை ஒரு செயல்வீரர்!

"சின்னண்ணை" என்று உறவினர்களாலும் அரசியற் சகபாடிகளாலும் அன்புடன் அழைக்கப்பட்டுவந்த கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசுப்பிரமணியம் கதிரவேலுப்பிள்ளை இன்று அமரராகிவிட்டார். எல்லாம் தமிழ் என வாழ்ந்த அண்ணல்; கோப்பாய் தந்த கோமான் அமரர் வன்னியசிங்கம் அவர்கள் தமிழர் விடுதலைப் பணியில் விட்டுச்சென்ற பெரும் இடைவெளியை ஓரளவு தன் சொல்லாலும் செயலாலும் நிரப்பிவந்தவர் அமரர் கதிரவேலுப்பிள்ளை அவர்கள்

அமரர் கதிரவேலுப்பிள்ளை அவர்கள் அண்ணல் அமிர்தலிங்கம்போன்று அரசியலில் படிமுறைவளர்ச்சிபெற்று வந்தவர் இவர் ஏதோ திடீரென அரசியற்கொட்பில் ஏறி ஆகாயத்தில் பறந்த சூரர் அல்லர்.

1955ம் ஆண்டின் முற்காலப் பகுதியில் தொழில் துறை நோக்கி யாழ்ப்பாணம்வந்தார் கதிரவேலுப்பிள்ளை அவர்கள். அமரர் வன்னியசிங்கம் அவர்களின்நிழலில் தொழில்பயிற்சி தொடங்கிய இவரின் அரசியற் சிந்தனைப்போக்கும் அவர் சார்ந்ததாகவே அமைந்துவிட்டது.

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியில் நாங்கள் இருவரும் சமகால உறுப்பினர்களானோம். 1957ம் ஆண்டு கதிரவேலுப்பிள்ளை அவர்கள் தமிழரசு வாலிபமுன்னணியின் தலைமைப்பதவியை பொறுப்பேற்றார். நான் கொக்குவில் தமிழன் பாசறை அருணாசலத்துடன் இணைந்து தமிழரசு வாலிபமுன்னணியின் செயலாளர் பதவியை ஏற்றேன். தலைவர் செயலாளர் என்ற பதவி உறவும் குடும்ப உறவும் எங்கள் இருவர் மத்தியிலும் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்தியது.

சிங்கள "சிறீ" எதிர்ப்புப் போராட்டத்தல் அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களும் சிறீதரனும் முதலில் "சிறீ" அழித்தார்கள். அப் போரிப் படையில் இரண்டாவதாக களம் இறங்கி "சிறீ" அழித்தவர்கள் - தமிழரசு வாலிப முன்னணியின் செயலாளரும் தலைவரும் என்ற முறையில் நாங்கள் இருவருமாகும் எங்கள் மீது தொடரப்பட்ட "சிறீ" எதிர்ப்பு வழக்கு சட்ட நுணுக்கம்காரணமாகத் தள்ளுபடி செய்யப்பட்டது. முதலில் சட்ட நுணுக்கம் காரணமாகத் தள்ளுபடிசெய்யப்பட்டது. முதலில் சட்ட நுணுக்கம் காரணமாகத் தள்ளுபடிசெய்யப்பட்ட வழக்கும் நாங்கள் இருவரும் சார்ந்ததேயாகும்.

**இ. சங்கர்**
(இலங்கை தமிழரசு வாலிப முன்னணி முன்னாள் செயலாளர்)

1958ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது அண்ணல் கதிரவேலுப்பிள்ளையின் வழி நடத்தலில் இளைஞர்களாகிய நாம செயல்பட்டோம். மூத்த தலைவர்கள் அனைவரும் அப்பொழுது தடுப்புமுகாம்களிலும் வீட்டுக்காவலிலும் வைக்கப்பட்டிருந்தார்கள்

"சிங்களப் பிரதமருக்கு உலகத் தலைவர்களின் புகழ்மாலை" என்ற தொகுப்பு நூல் எங்கள் பணியில் ஓர் சிறு அறுவடையாகும்.

அண்ணல் கதிரவேலுப்பிள்ளை அவர்கள் புகழ்மிக்க குடும்பத்தில் தோன்றியவர். இன்னும் உயிருடன் வாழும் அமரரின் தந்தை பெரியார் சிவசுப்பிரமணியம் அவர்கள் தமிழ்க் காங்கிரஸ் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். [கதிரவேலுப்பிள்ளை அவர்கள் கோப்பாய்க்கும் கந்தரோடைக்கும் சொந்தமானவராவர். இரட்டையர்களில் ஒருவராகத் தோன்றியவர் கதிரவேலுப்பிள்ளை அவர்கள் இரட்டையர்கள் இருவருமே சட்டத்துறையில் இமயமைல் கற்களை ஏற்படுத்தியவர்கள் ஆவர். இரட்டையரில் முதல்வரான அம்பலவாணர் கொழும்பில் சிறப்புமிக்கசட்ட ஆலோசகராக விளங்குகின்றார். கதிரவேலுப்பிள்ளை அவர்களுக்கு இரு பெண் சகோதரிகளும் உண்டு. மூத்த மைத்துனர் சண்முகநாயகம் அவர்களும் ஓர் சட்டத்தரணிஆவர். இவரது குடும்பத்தில் தந்தை உட்பட ஆண்கள் அனைவருமே சட்டத்தரணிகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கதிரவேலுப்பிள்ளை அவர்கள் சட்டம் பயில்வதற்கு முன் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மெய்யியற்றுறைச் சிறப்புப் பட்டம் பெற்றார். இத்துறையில் இவர் சில நூல்களையும் எழுதியுள்ளார். "மேலை நாட்டுத் தத்துவ தரிசனம்" என்னும் நூல் குறிப்பிடத்தக்கதாகும்.

1960ம் ஆண்டு யாழ்ப்பாணத் தொகுதியில் இலங்கைத் தமிழரசுக்கட்சி வேட்பாளராக கதிரவேலுப்பிள்ளை அவர்கள் ஜீ ஜீ பொன்னம்பலத்தை எதிர்த்துப் போட்டியிட்டார். இத்தேர்தலில் கதிரவேலுப்பிள்ளை தோற்கடிக்கப்பட்டு சுயேச்சைவாதியான அல்பிரட் துரையப்பா வெற்றிபெற்றார். கதிரவேலுப்பிள்ளைதோற்கடிக்கப்பட்டபோதிலும் மக்கள் மத்தியில் அமைதியான சிந்தனைப்போக்கைப்பெற்ற ஒருவர் என்ற நல்மதிப்பைப் பெற்றார். "சிந்தனைச்சிற்பி" எனவும் போற்றப்பட்டார்.

1965ம் ஆண்டு தேர்தலில் கோப்பாய்த் தொகுதியில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிட்டு கதிரவேலுப்பிள்ளை வெற்றியீட்டினார். அன்றுமுதல் அமரர் வன்னியசிங்கத்தின் தொகுதியை அவரே பிரதிநிதித்துவம் செய்துவந்தார். எவ்வாறு அமரர் வன்னியசிங்கம் கோப்பாய் மக்களின் பிரதிநிதியாக இருந்து அமரரானாரோ அவ்வாறே அவர் வழிவந்த கதிரவேலுப்பிள்ளை அவர்களும் கோப்பாய்த் தொகுதிப் பிரதிநிதியாகவே இயற்கையெய்தினார்.

தந்தை செல்வாவைப் போன்று அமைதியான போக்கைக் கடைப்பிடிக்கும் கதிரவேலுப்பிள்ளை அவர்கள் தந்தை அவர்களின் ஜனன நாளில் அமரரானார். தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும். இது வள்ளுவர் வாக்கு.

## தமிழீழ விடுதலைக்காக இறுதிமூச்சுவரை இயங்கியவர்

"தமிழீழத்தின் விடுதலைக்காகத் தன் இறுதிமூச்சுவரை இயங்கிக்கொண்டிருந்த சிந்தனைச் சிற்பி கதிரவேலுப்பிள்ளை அவர்களின் இழப்பு வேறு யாராலும் ஈடுசெய்ய முடியாததாகும்."

"தமிழின விடுதலைக்காகப் போராடிய "சிந்தனைச் சிற்பி" அவர்கள் அந்த விடுதலைக்குத் தன்னை அர்ப்பணிப்பதற்காகத் தனக்கு ஏற்பட்ட நோயுடனும் நீண்டகாலம் போராடி வந்திருக்கிறார்"

"தமிழினத்தின் விடுதலைக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி கட்டுப்பாடகக் கட்டியெழுப்பவேண்டும் என்றும் இறுதிவரை உழைத்தவர். அவரை இழந்து தவிக்கும் அவர் குடும்பத்தினருக்குத் தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்."

மாவைசேனாதிராசா
(தமிழ் இளைஞர் பேரவை தலைமைக் கட்டுப்பாட்டுக் குழு)

## பேரிழப்பு

"சிந்தனை சிற்பி கதிரவேலுப்பிள்ளையின் மறைவு தமிழ் உலகத்திற்குப் பேரிழப் பாகும்" என்று தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த திரு க. முருகத்தினம் வெளியிட்ட அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தமிழ் ஈழ லட்சியத்திற்காக தமது பூவையே தியாகம் செய்துள்ளாரென்றும், மக்களின் நல்வாழ்விற்காக அயராது உழைத்து வந்தார் என்றும் அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள.

## தீண்டாமையை ஒழிக்க போராடியவர்

"தமிழினத்தை கூறுபோட்டுவந்த தீண்டாமையை அடியோடு ஒழிக்கவேண்டும் என்று அமரர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை 1957ம் ஆண்டு தொடக்கம் தீண்டாமை ஒழிப்பு வாரத்தை தொடக்கி தோட்டி வேலை செய்து காட்டிய செயல் வீரனை இழந்தது தமிழ்மக்களுக்கும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாக உள்ளது" இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மானிப்பாய் தொகுதி செயலாளர் திரு. ஆசீர்வாதம் ஹென்றி ஜே.பி. விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# "கத்தோலிக்கப் பணியில் இளைஞர் ஈடுபடவேண்டும்" - யாழ். மேற்றிராணியார்

(உடுப்பிட்டி)

"கரவெட்டிப் பகுதியிலுள்ள கத்தோலிக்க இளைஞர்கள், தமது பங்குக் குரவருக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி கத்தோலிக்கப் பணியில் ஈடுபட்டு, கிறிஸ்துவின் நற்சாட்சியாக வாழ்ந்து காட்ட வேண்டும் என்று யாழ். மேற்றிராணியார் அதி. வந். கலாநிதி பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் உறுதிப் பூசுதல் என்னும் திருவருட் சாதனத்தை வழங்கி வைத்த பின்னர், அங்கு கரவை கத்தோலிக்க மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

இவ் வரவேற்பு வைபவம் கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் கரவெட்டிப் பங்குக் கட்டளைக்குரவர் அருட்திரு. டோமினிக் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. யாழ். மேற்றிராணியார் அதி வந். கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை மேலும் பேசுகையில் கூறியதாவது:

"சுமார் 150 வருட காலப் பழமை வாய்ந்ததாக விளங்கும் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தின் கூரை தகர்ந்துவிழும் நிலையிலிருப்பதாக இங்கு தெரிவிக்கப்பட்டது. இத்தேவாலயக் கூரையைத் திருத்தியமைப்பதில் தேவாலயப் பங்கு மக்கள் ஈடுபடுவார்களேயானால், யாழ். மேற்றிராசனமும் தம்மாலான உதவிகளை வழங்கும். இன்றைய நிலையில் கத்தோலிக்க மக்கள் தமது பகுதிகளில் பழுதான நிலையிலுள்ள தேவாலயங்களைத் திருத்துவதற்கு முயற்சிக்க வேண்டுமேதவிர புதிய ஆலயங்களைக் கட்டுவதற்கு முயலக்கூடாது" என்றார்.

# தாயார் ஏசினாராம் 19வயது மகள் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

தாயாருடைய கண்டனப் பேச்சைப் பொறுக்க முடியாத மகள் நஞ்சருந்தி தனது உயிரைப் போக்கிக் கொண்டார்.

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்துரை வசந்தலட்சுமி (19 வயது) என்ற இளம் பெண்ணே தற்கொலை செய்து கொண்டவராவார். இறந்தவருடைய தாயார் தனது சாட்சியத்தில், தாம் யாழ்ப்பாணம் சென்றுவருவதாகவும் தோட்டத்தில் வேலை செய்யும் தனது ஆண் பிள்ளைகளுக்கு மத்தியானச் சாப்பாட்டைக் கொடுக்குமாறு இறந்தவரிடம் கூறிச்சென்றதாகவும் யாழ்ப்பாணத்தில் இருந்து பிற்பகல் மூன்று மணியளவில் வீடு திரும்பியபோது அவர் கதைப்புத்தகம் வாசித்துக்கொண்டிருந்ததாகவும் வேலைசெய்யும் பிள்ளைகளுக்கு மதியபோசனத்துக்கு ஒழுங்குகள் ஏதும் செய்யாமல் இருப்பதைக் கண்டு கடுமையான வார்த்தைகளால் பேசியதாகவும் தெரிவித்தார்.

சாட்சியங்களைத்தொடர்ந்து புங்குடுதீவு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. ஆ. நமசிவாயம் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். (சி-இ)

## "அரிய கல்விமானை இழந்துவிட்டோம்"

(சுழிபுரம்)

'சைவப்பெரியார்சு சிவபாதசுந்தரனாரின் மரபில் உதித்த கலாநிதி சிவப்பிரகாசம் சைவப் பெரியாரைத் தொடர்ந்து எமது கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியமை மிகப் பொருத்தமுடைத்தேயாம், சைவப்பெரியார் அவர்கள் தமது மாணவருக்குப் போதித்த இலட்சிய வாழ்க்கை மேலும் விருத்தியடையச் செய்த பெருமை கலாநிதி அவர்களைச் சாரும்."

இவ்வாறு கலாநிதி சிவப்பிரகாசம் அவர்களின் அஞ்சலிக் கூட்டத்திற் பேசிய விக்டோறியாக் கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம் கூறினார்.

பண்டிதை பொன். பாக்கியம் பேசுகையில் "கலாநிதி சிவப்பிரகாசம் அவர்களிடம் கற்கும் பேறுகிடைக்காவிடினும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் ஆப்த நண்பன் கலாநிதி ஆதலால் அவர்களது சிறப்பு விவேகத்திறன் உளதத்துவ நிபுணத்துவம் முதலியவற்றை அறியும் வாய்ப்புக் கிட்டியது யாழ்ப்பாணம் ஒரு அரிய கல்விமானை இழந்துவிட்டது" என்றார்.

ஆசிரியர் திரு. ந. சண்முகமூர்த்தி பேசும்போது 'கலாநிதி அவர்கள் உளதத்துவத்தின் சிறப்புப் பட்டம் பெற்றாலும் அவருடைய பண்பு நிறைந்த வாழ்வு அவருக்கொரு தனிமதிப்பைக் கொடுத்து எம்மையெல்லாம் அவர்பாலீர்த்தது' என்றார்.

## "மாபெரும் அருட்செல்வர் யோக சுவாமிகள்"

(ஏழாலை)

"சிவயோகசுவாமிகள் செல்வர்களுக்கே துணைபுரிகிறார் என்று குறை கூறியவர்களும் உளர். உலகியல் வாழ்வில் பரம ஏழையாக விளங்கிய அவர் மாபெரும் அருட்செல்வராக விளங்கினார். அவரை நாடியதனவந்தர்களின் பக்குவ நிலையறிந்து அருள்பாலித்ததுடன் அவர்கள் வழங்கிய பொருட் செல்வத்தையெல்லாம் யாருமறியா வண்ணம் தமது பக்தர்களாக விளங்கிய ஏழைகளின் நல்வாழ்வுக்காக உபகரித்துவிட்டு, தாம் சாதாரணமானவொரு யாழ்ப்பாணத்துக் கமக்காரன் போல் வாழ்ந்து காட்டினார்."

இவ்வாறு ஏழாலை சைவமகா ஜன வித்தியாலயத்தில் நடைபெற்ற யோக சுவாமிகளின் குருபூசைத் தினத்தில் உரையாற்றிய சுன்னாகம் இராமநாதன் கல்லூரி விரிவுரையாளர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் குறிப்பிட்டார். வித்தியாலய மாணவ, மாணவிகளின் சிவபுராண படனத்தின்பின் நடைபெற்ற கூட்டத்திற்கு அதிபர் திரு. த. திருநாவுக்கரசு (நாவேந்தன்) தலைமை வகித்தார்.

திரு. நாவேந்தன் பேசுகையில், "நீண்டகாலம் நாத்திகனாகவும், பிறமதச் சார்புள்ளவனாகவும் வாழ்ந்த தன்னைச் சைவ வாழ்வுக்குத் திரும்பிவரச் செய்த பெருமை யோக சுவாமிகளின் பாததாமரைகளுக்கே உரியது என்றும், தன்வாழ்வில் ஏற்படவிருந்த பல ஆபத்துக்களிலிருந்தும், துன்பங்களில் இருந்தும் அவர் விடுவித்துள்ளார் என்றும் சொன்னார். இன்றைய இளைய சந்ததி, மாணவ சமுதாயம் உண்மையான சமயவாழ்வை நாடவும், தேடவும் யோக சுவாமிகளின் குருபூசைத் தினம் வழிகாட்டுவதாக அமையும்" என்றும் அவர் சொன்னார். (அ)

## பஸ் நிலையத்தில் கைது

(மன்னார்)

மன்னார் பஸ் நிலையத்தில் வைத்து மன்னார் பொலிசாரினால் 'டைனமெட்' வெடிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த கே. முனியா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## தந்தை செல்வா பிறந்த நாள்

(மாவிட்டபுரம்)

மூதறிஞர் தந்தை செல்வாவின் 83-வது பிறந்த தினத்தையொட்டி காங்கேசன்துறைத் தொகுதியில் விசேட வழிபாடுகள், பிரார்த்தனைகள் நடைபெற்றன. இப்பகுதியிலுள்ள சைவ, கிறிஸ்தவ ஆலயங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைகளின் சார்பில் இந்த வழிபாடுகள் நடைபெற்றன.

மூதறிஞர் தந்தை செல்வாவின் பெயரால் இடம்பெற்ற இவ்வைபவங்களில் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## கலையரசுவிற்கு 93 வயது

(யாழ்ப்பாணம்)

ஈழத்து தமிழ் நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் கடந்த 30-ந் திகதி தனது 93-வது பிறந்த தினத்தை நவாலியில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடினார்.

கலைஞர்களும், எழுத்தாளர்களும் அவரின் இல்லத்திற்குச் சென்று தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மன்னாரில்

## கட்டிடப் பொருள் தட்டுப்பாடு நீங்கும்?

(மன்னார்)

மன்னாரில் கட்டிடப்பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக் கிளை ஒன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக் கிளை திறக்கப்பட்டதும் மன்னார் மாவட்டத்தில் கட்டிடப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது.

## வயோதிபர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

நோய்க்கொடுமை தாங்காத வயோதிபர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த வைத்தி கதிரவேலு (வயது 85) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

மரண விசாரணையை நடாத்திய புங்குடுதீவு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆ. நமசிவாயம் சாட்சியங்களின் வாக்கு மூலத்தையடுத்து தற்கொலை மரணமெனத் தீர்ப்பு வழங்கினார். (சித் தி.

மாவட்ட அபிவிருத்திச்சபை

# ஐ.தே.கட்சி வேட்பாளர்

(நெல்லியடி)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களை தெரிவு செய்து, கட்சி மேலிடத்திற்கு சிபார்சு செய்வதற்காக வடபகுதி வந்திருந்த கோஷ்டியொன்று கொழும்பு திரும்பியுள்ளது.

வடபகுதியில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களைக் கண்டு பேசிய இக்கோஷ்டியில் ஜாதிக சேவை ஊழியர் சங்கத் தலைவர்களில் ஒருவரான திரு. எஸ். பொன்னம்பெருமா, திரு. லம்பர்ட், திரு. ஆர். ஜெயரட்ணம் ஆகியோர் அடங்கியிருந்தார்கள். இக் கோஷ்டியினர் உடுப்பிட்டித் தொகுதியில் இளைப்பாறிய பாடசாலை அதிபர் திரு. கே. அரியரட்ணம், இ. போ. ச. டிப்போ முகாமையாளரொருவர் ஆகியோரைச் சந்தித்திருந்தனர். 31-ம் திகதி யாழ்ப்பாணத்தில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தலைமையில் நடைபெற்ற வேட்பாளர் தெரிவில் உடுப்பிட்டித் தொகுதி சார்பாக திரு. கே. அரியரட்ணமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென பலரும் சிபார்சு செய்திருந்தனர்.

பருத்தித்துறைத் தொகுதியிலிருந்து பருத்தித்துறை நகராட்சி மன்ற உறுப்பினர் திரு. வி. சந்திரசேகரம், கோப்பாய்த் தொகுதியிலிருந்து திரு கே. தம்பாபிள்ளை ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வேட்பாளர் பட்டியலில் இடம் பெறுவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

"அபுதாபி வழங்கும்

## இழுவைக்கப்பல்களில் ஐந்தை யாழ்ப்பாணத்திற்கு வழங்குக"

(யாழ்ப்பாணம்)

அபுதாபி அரசு இலங்கைக்கு வழங்கும் பாரிய மீன்பிடி இழுவைக் கப்பல்களில் ஐந்தை யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களுக்கு வழங்கவேண்டுமென கடற்றொழில் அமைச்சரை யாழ்ப்பாணம் ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபை கோரியுள்ளது.

சபையின் வருடாந்தக் கூட்டம் கடந்த மாதம் 29-ந் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இப்பிரேரணை நிறைவேறியது.

மிளகாய், சின்னவெங்காயம் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவேண்டும். வடபகுதி முறைமுகத்திற்கு உணவுக்கப்பல்களை அனுப்பவேண்டும். யாழ். மாவட்டத்தில் 2000 கலன் கள் வடிக்கும் வடிசாலை அமைக்கவேண்டும் எனக் கோரும் பிரேரணைகளும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (து-வி)

## பேசாலைப் பகுதிக்கு மீண்டும் மின்சாரம்

(மன்னார்)

பேசாலைப் பகுதி மீண்டும் ஒளி பெறவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை பேசாலை கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளர் திரு வேலுப்பிள்ளை சண்முகநாதன் மேற்கொண்டுள்ளார்.

பேசாலைப் பகுதிக்கு அடுத்த மாதம் நடுப்பகுதியிலிருந்து மின்சாரம் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் பேசாலை கிராமாட்சி மன்றம் பேசாலைப் பகுதிக்கு மின்சாரம் வழங்கி வந்தது. கிராமாட்சிமன்ற 'ஜெனரேட்டர்கள்' பழுதடைந்ததால் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. இதனால் பேசாலை ரயில் நிலையம், வைத்தியசாலை, தபால்நிலையம் ஆகியன இருளில் மூழ்கியிருந்தன. பேசாலை கிராமாட்சிமன்ற விசேட ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. வேலுப்பிள்ளை சண்முகநாதனின் முயற்சியின் பயனாக பேசாலைப்பகுதி மீண்டும் ஒளி பெறவிருக்கிறது.

## இலங்கையிலும் கோதுமை சாகுபடி

(கொழும்பு)

இலங்கையிலும் கோதுமை பயிரிடப்படவுள்ளது பண்டாரவளை, கேகாலை, ஊவாப்பிரதேசத்தில் கோதுமையை பயிரிட்டு நல்ல சாகுபடி பெறலாம் என 2 ஆண்டு ஆராய்ச்சியின்பின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் சங்க ஆண்டுக் கூட்டத்தை அடுத்த மாதம் 31ம் திகதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கு முன்னர்

# மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் நியமனம்?

(மட்டக்களப்பு)

மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தல் ஜூன் மாதம் நடைபெறவிருப்பதால் தற்போது காலியாகவுள்ள மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் பதவி மிகவிரைவில் நிரப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகவிருந்த திரு. எம். கனகரத்தினம் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் காலமானதையடுத்து இப்பதவி காலியாகவுள்ளது. அவர் காலமாகி ஒருவருடமாகியும் அவரின் வெற்றிடம் நிரப்பப்படவில்லை.

ஜூன் மாதம் மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தல் நடைபெறவிருப்பதால் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி வேலைகளை துரிதமாக மேற்கொள்ளவேண்டுமெனவும், மாவட்ட சபைக்கு தலைமை தரப்படும்பொறுப்பு, மாவட்ட அமைச்சரிடம் இருப்பதால் தேர்தலுக்குமுன்னர் மாவட்ட அமைச்சரை தெரிவுசெய்ய வேண்டுமென்றும் இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தை கோரியுள்ளனர். இதுகுறித்து பல தமிழ் முஸ்லிம், சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் பரவலாக அடிபடுகின்றன.

## ஆசிரியர்சங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க சாவகச்சேரிக்கிளையின் வருடாந்தப்பொதுக்கூட்டம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தாய்ச்சங்கப்பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம், யாழ். மாவட்ட சங்கச்செயலாளர் திரு. எஸ். சிவபாலசிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப்போட்டியின்றி திருவாளர்கள் த. காசிநாதர், ந. சங்கரப்பிள்ளை, க. விநாயகமூர்த்தி ஆகியோர் முறையே தலைவர், செயலாளர், பொருளாளராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா
மன்னவன் வந்தானடி

லிடோ
(யாழ்நகர்)
Daily 10-30, 2-15, 4-45, 7 15 & 9-45
JON VOIGST. FAYE DUNAWAY in
THE CHAMP

பார்த்துவிட்டீர்களா? பறவைகள் பறந்து விடப்போகின்றன! திசைமாறிய பறவைகள் கடைசி வாரம்!
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
திசைமாறிய பறவைகள்
— மகளிர்க்கு மிக ஏற்ற சித்திரம் —


மனோகரா தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
கவரிமான்

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
3-வது ஜுவாலை வீசும் வாரமாக,
★ ரஜனி காந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ சௌகார் ஜானகி நடித்த
தீ
இலங்கை-இந்திய தயாரிப்பு

தினசரி 4 காட்சிகள்
ராஜா (யாழ்ப்பாணம்) இன்று மட்டும்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி - ஜெயலலிதா
நடித்த
அரச கட்டளை
(புதிய பிரதி)
நாளை முதல் பாக்கியராஜா - ரதி
புதிய வார்ப்புகள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்
"நிறம் மாறாத பூக்கள்" புகழ் பாரதிராஜா

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரிகாலை 10-30, பி.ப.2-00, மாலை 4-30, 7-00, 9-30
CHARLES BRONSON JAMES COBURN
THE STREET FIGHTER
Co-Starring-Jill Ireland Strother Martin
The Times were hard, The Streets were tough
...but Bronson was tougher
An hard-hitting motion-Picture
Color-Panavision

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
நடித்த
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)



வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் 'ஈழநாடு' ஆதரவில் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் சாம்பியன் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு விழாவின்போது மேற்படி நிலையச் செயலாளரும், சுற்றுப் போட்டி அமைப்பாளருமான திரு. எம். ஜெகநாதன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடபகுதி பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. பி. மகேந்திரன் உரையாற்றுவதையும், வைத்திய கலாநிதி திருமதி மகேந்திரன், சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட பலாலி அண்ணா விளையாட்டுக் கழகத்தலைவர் திரு. அருளானந்தத்துக்கு சாம்பியன் கேடயத்தை வழங்குவதையும் இங்கு காணலாம்.

## தவக்கால நற்சிந்தனை

### கிறிஸ்துவின் உயிர்ப்பும் மறைவும்

கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய நிகழ்ச்சிகள் என்றோ ஓர் நாள் நிகழ்ந்து முடிந்தது ஒன்றல்ல. இன்றும் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒன்றாகும். காரணம் கிறிஸ்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவர் அவர் நித்தியமாக வாழ்பவர் அவர் செயல்களும் நித்தியமாக செயற்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கும். ஆகவே இன்று வாழும் மனிதனும் கிறிஸ்து அன்று நிகழ்த்திய மீட்புச்செயல்களாகிய பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குபெறக் கூடியவனாக இருக்கின்றான். அன்று கிறிஸ்து வெளிப்படையாக செய்ததை இன்று மறைபொருள் வடிவில் மறையுடலாகிய திருச்சபையுடன் இணைந்தவராக தம் வல்லமையால் செயற்படுத்துகின்றார் அவருடைய உறுப்புக்களாகிய திருச்சபை உறுப்பினர் ஒவ்வொருவரும் தலைவராகிய கிறிஸ்துவுடன் சேர்ந்து மரித்து உயிர்க்க வேண்டியவர்களாக உள்ளோம்.

—அருட்திரு மேரி பஸ்ரியன்

## ப.நோ.கூ.சங்க சிற்றுண்டிச்சாலை

(மன்னார்)

மன்னார் பல.நோ.கூ.சங்கம் மன்னார் ரயில் நிலையத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இத் தீர்மானம் இயக்குநர் சபைத்தலைவர் திரு. ஜே. சி. பெனடிக்ற் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நாகம்ஸ் (மன்னார்)
தினசரி 6-30, 9-30
The Golden Voyage of SINBAD

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—சுஜாதா
தீபம்
(புதிய பிரதி-ஈஸ்மன் கலர்)

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
மகத்தான 2-வது மாதம்
ரஜனிகாந்த்—ஷோபா
நடித்த
முள்ளும் மலரும்
போன்: 331 (கலர்)

# இன்றைய பலன்

**பங்குனிமாதம் 20-ம் திகதி வியாழக்கிழமை (2-4-81)**

மேடம்: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும் காதல் கணைதாக்கும் கலைஞர்கள் கௌரவிக்கப் படுவார்கள் பாலுணர்ச்சி மேலிடும்.

இடபம்: பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம். முகமன் பேசுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும் அதிக சிந்தனைக்கு இடமளியாது வாயுப்பாதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

மிதுனம்: சுறுசுறுப்புக் குன்றும் உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள் குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றி மறையும் கொள்கையில் கோளாறுடன் கோபமும் தோன்றி மறையும் அமைதி நன்று.

கடகம்: மேடைப் பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர் நாடகக்கலைஞர்களுக்கு நன்மையான தினம் இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு. சிறப்பான தினம்.

சிங்கம்: துஷ்டர்கள் உறவு உங்களைச்சங்கடத்தில் மாட்டி வைக்கும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு வழக்கு விவகாரத்தைத் தவிர்த்துக் கொள்ளவும் உணர்ச்சி வசப் படாதிருக்கவும்.

கன்னி: கற்றதால் பயன் இன்று கைமேல் கிடைக்கும் தாய்வழிச் செய்தியும் வரலாம். அறிஞர்கள் ஆதரவு தருவர் தொழில்புரியும் இடத்தில் செல்வாக்கும் பெருகும் இன்று சுபதினம்.

துலாம்: அறவழியில் நாட்டம் செல்லும் வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும், இரக்க சிந்தையின் மூலம் பொருட்செலவுண்டு. கற்றமனிதனின் வாழ்த்து கண்டிப்பாகக் கிடைக்கும்.

விருச்சிகம்: நம்பிக்கை மோசடி நடக்கும் வியாபாரத்துறையில் நஷ்டம் ஏற்படலாம் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும் சிலருக்கு வாதரோகம் தென்படக்கூடும், உணவு விஷயத்தில் அதிக சுகாதாரம் வேண்டும்.

தனு: கவர்ச்சிகரமான தினம் காதலர்கள் இன்பத்தில் மிதப்பர். கரும்பு போல் வாழ்க்கை இனிக்கும் களஸ்திரவழியாலும் சுகம் கிடைக்கும் செல்வாக்கு மேலும் சிறப்படைவதற்கு இடமுண்டு.

மகரம்: விபத்துக்கு இடம் ஏற்படும் எதிலும் நிதானத்துடன் நடந்து கொள்ளவும் பகைமிகளிலும் பணம் செலவாகும் சிலர் கடன்படவும் நேரிடலாம். எதிரிகளின் அட்டகாசம் அதிகரிக்கும்.

கும்பம்: தேனான சம்பவங்கள் நடைபெறும் தேடியது கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் தித்திப்பான தினம் முதியோர்கள் வாழ்க்கையில் இளமைநினைவுகள் நிழலாட்டம் போடும்.

மீனம்: தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்துக்கு வழிகோலப்படலாம். இதன்மூலம் பதவியின் உயர்வும் கிடைக்கலாம் போட்டி காண்பதற்கு ஏற்றதினம்.

சோதிடகலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

## விளையாட்டு அமைச்சு உதவும்

(நெல்லியடி)

கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டுத்துறை உபகரணங்களை வழங்க விளையாட்டுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளதுமேலும் உபகரணங்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்.மாவட்ட அமைச்சர் திரு யு.பீ.விஜயக்கூன் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தை திறந்து வைத்துப்பேசுகையில் தெரிவித்தார். (அ)

## றீகனுக்கு ஜே. ஆர்., செய்தி

(கொழும்பு)

தங்களைப் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி அறிந்து அதிர்ச்சி அடைந்தேன் தாங்கள் விரைவில் சுகமடைய எனது நல்லாசிகள்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அமெரிக்க அதிபர் திரு. ரொனல்ட் றீகனுக்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிர்தப்பி மீண்டும் அமெரிக்க மக்களுக்குத் தலைமை தாங்கக் கூடிய நிலையில் தாங்கள் இருப்பதையிட்டு ஆறுதல் அடைகிறேன் என்று திரு ஜெயவர்த்தன தமது செய்தியில் தெரிவித்துள்ளார். (இ)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி தெற்கு வருத்தலைவிளான் ராஜராஜேஸ்வரி அம்பாள்ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன திருக்குடத் திருமஞ்சனப் பெருவிழாத்திருமுக மஹாகும்பாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமையும், திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளது. (சி)

## திருப்பாடுகள் காட்சி

(மன்னார்)

முருங்கன் கிறிஸ்து ராசா ஆலய முன்றலில் நாளை யேசு நாதரின் திருப்பாடு காட்சிகள் காண்பிக்கப் படவுள்ளது. கிறிஸ்தவ தபசு காலத்தை யொட்டி முருங்கன் பங்கு மக்களால் இத் திருப்பாடு காட்சிகள் காண்பிக்கப்படவுள்ளன.

யமஹா
8 HP, 15 HP
அவுட்போட் மோட்டர்கள்
மற்றும்
யமஹா
மோட்டார் சையிக்கிள்கள்
பெற்றுக்கொள்ள
நியூகெங்கா
றேடிங்சென்றர்
76, ஆஸ்பத்திரிவீதி-யாழ்ப்பாணம்.
(8752)

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி
G. C. E. (A/L) 82
வர்த்தகம், விஞ்ஞானம்
ஆரம்பம்: 14-4-81
தாவரவியல் - சிவவீரசிங்கம், விலங்கியல்- ஜெகானந்தகுரு, பௌதிகம்: விமல்ராஜ், இரசாயனம்: அன்ரன் மாஸ்ரர், தூயகணிதம் பிரயோக கணிதம் - பிரபல ஆசிரியர், கணக்கியல்: பாலா மாஸ்ரர், அளவையியல், வர்த்தகம், பொருளியல் - பிரபல ஆசிரியர்கள்.

## பத்திரிகை ஸ்தாபகர் காலமானர்

நியுயோர்க் ஏப். 01 மானுர்.

உலகிலேயே அதிக வாசகர் 16 மொழிகளில் வெளிவரும் கனைக் கொண்ட 'றீடர்ஸ்டைஜஸ்ட்' பத்திரிகையின் ஸ்தாபகர் இப்பத்திரிகையை 2 கோடி வாசகர்க வடித்து வருகின்ற கரான திரு பீச் வெலர்ஸ் காலமானர். (கு)

## கொள்ளையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் நடந்த இம்மாநாட்டில் உதவி பொலிஸ் அதிபர் ஜனுப் நிசாரும் கலந்து கொண்டார்.

இக் கொள்ளை சம்பவம் பற்றி விசாரணையில் கிடைத்ததகவல்பற்றி டி.ஐ.ஜி மகேந்திரன் மேலும் தெரிவித்ததாவது!

சம்பவதினம், வங்கி வான்கள் இரண்டில் 4 பணப் பெட்டிகள் கொண்டுவரப்பட்ட போது, சோமசெற்கார் ஒன்று முன்னுல் குறுக்கில் விடப்பட்டு, பாதுகாப்புக்குச்சென்ற இரு பொலிஸ் கன்ஸ்டபிள்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர், வங்கி ஊழியர்களும் அவ்விடத்தை விட்டு சென்ற பின் வான் ஒன்று புன்னுலைக்கட்டுவன் பகுதியிலிருந்து 'றிவேர்சில் கொண்டுவரப்பட்டு, ஒரு வங்கி வானிலிருந்து 2 பணப் பெட்டிகள் அந்த வானில் ஏற்றப்பட்டது.

### 3 வாகனங்கள் சென்றன...

முதலில் ஒரு வங்கி வானில் 2 பணப்பெட்டியும் பின்னுல் கொள்ளையரின் வானில் 2 பணப்பொட்டியும், அதன் பின்னுல் காரும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது.

கொள்ளை நடந்த இடத்திலிருந்து வங்கி வானில் 2பேரும் கொள்ளையரின் வானில் 3 பேரும், காரில் 6 பேரும் சென்றுள்ளனர். வங்கி வானை கொள்ளையர் ஒருவரே ஓட்டியிருக்கிருர். அந்தவான் 'கியர்' பிசகு ஏற்பட்டு புதைந்ததால், பணப் பெட்டிகள் மற்ற வானுக்கு மாற்றப்பட்டது.

### வங்கிவான் புதைந்தது

வங்கி வான் சிறிது தூரம் சென்றதும் புதைந்துவிட்டது. எல்லோரும் இறங்கி அந்த வானை தள்ளிப் பார்த்திருக்கிருர்கள் பயன் கிடைக்காததினுல் வங்கி வானில் இருந்த 2 பணப் பெட்டியையும் தங்கள் வானில் ஏற்றினுர்கள்.

### 10 மைல் வேகத்தில் சென்றது

4 பணப் பெட்டிகளையும் கொண்ட அந்த வான் அவ்வீதியால் 10 மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்திருக்கிறது அவ்வீதியால் சென்றோர் இத்தினத்தில் அந்த வானை அவதானித்திருக்க முடியும். இது பற்றி தெரிந்தவர்கள் எனக்கு நேரிலோ கடிதமூலமோ அறிவிக்கலாம் தகவல் ரகசியமாக வைக்கப்படும்.

இந்த வானும், காரும் அன்றுபிற்பகல் 3 30மணிமுதல் மறுநாள் அதிகாலை 3-30 மணி வரை ஒரு இடத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது. மறுநாள் அதிகாலை 3-30 மணிக்கு பின்னர்தான் இந்தவான் உடுவிலில் எரிக்கப்பட்டிருக்கிறது.

### பெட்டிகளை உடைக்க 12 மணி

வானில் கொண்டுவரப்பட்ட 4 பணப்பெட்டிகளும் விசேடமாக செய்யப்பட்டது. இலகுவில் உடைக்க முடியாது துவக்கினுல் சுட்டும் பூட்டை உடைக்க முடியாது. இரும்பு அரம் கொண்டுதான் வெட்ட முடியும். ஒரு பெட்டி பூட்டை வெட்டசுமார் 3 மணிநேரம் பிடிக்கும் அத்துடன் வெட்டும் சத்தம் அயலிலுள்ளவர்களுக்கும் கேட்டிருக்கும். 4 பெட்டிகளையும், மறுநாள் அதிகாலை வெட்டியிருக்கிருர்கள். அதன் பின்னரே பணத்தை எடுத்து விட்டு சென்றுள்ளனர்.

### கொம்பனித்தெருவில் வாங்கியவான்

கொள்ளையர் கொண்டு போன வான் (உடுவிலில் எரிக்கப்பட்ட வான்) 6மாதத்திற்கு முன் கொம்பனித் தெருவில் வாங்கப்பட்டுள்ளது. அப்பொழுது அதன் இலக்கம் CV 296. இது ஒரு A 40 டிலிவரி வான். 51ம் ஆண்டு இதற்கு நீலமை பூசப்பட்டிருந்தது. பின் அப்பிள் பச்சை நிறமாக மாற்றப்பட்டுள்ளது.

கொள்ளை நடப்பதற்கு 3 கிழமைக்குமுன் இக்காரின் நிறம் சாம்பல் நிறமாக அவசரமவசரமாக மாற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்த வான் CV 2395 என்ற இலக்கத்தில் நடமாடியிருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது. சம்பவம் நடந்த தினமும் இதே இலக்கத்தில் நடமாடியிருக்க வேண்டும்.

அப்பிள் பச்சை நிறமாக இந்தவான் ஓடியபோது வேறு இலக்கம் போட்டு ஓடியிருக்கலாம் இந்தவானில் லக்கேஸ் கரியலும் பூட்டப்பட்டுள்ளது.

இந்தவான் பற்றிய விபரத்தைத்தெரிந்தவர்கள், இந்த வான் நடமாடிய இடங்களை அறிந்தவர்கள், இந்த வானின் நிறம் மாற்றப்பட்ட கருச்சை அறிந்தவர்கள், உடனடியாக என்னுடன் நேரில் அல்லது கடித மூலம் அறிவிக்கலாம். தகவல் தருபவர்கள் சாட்சியாக அழைக்கப்படமாட்டார்கள். அவர்களின்வாக்குமூலமும் பதிவு செய்யப்படமாட்டாது.

கொள்ளைக்குபாவிக்கப்பட்ட சோமசெற்காரும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இக்கார் பற்றிய தகவல் தெரிந்தாலும், அறிவிக்குமாறும் பொது மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்பொழுது கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை தேடிவருகின்ருேம். கொள்ளையர் பற்றிய விபரங்களும் தெரிந்துள்ளதால், அவர்களையும் தேடிவருகின்ருேம். பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## விடுதலைக்காக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வையும், தமிழ்இனத்தின்வாழ்விற்காக அர்ப்பணித்த சிந்தனையாளரின் மறைவு நிரப்பமுடியாத ஒரு பெரிய இடைவெளியை ஏற்படுத்திவிட்டது

கடைசி மூச்சிலும், அவர் உள்ளத்தில் நிறைந்துநின்ற ஒரே சிந்தனையான 'தமிழ்ஈழ' விடுதலையை விரைவில்காண உழைப்பதே அவருக்கு நாம் செய்யக்கூடிய கைமாருகும். அவரை இழந்து தவிக்கும் அவருடைய துணைவியாருக்கும், செல்வக் குழந்தைகளுக்கும், அவரின் தந்தையார் பெரியார் சிவசுப்பிரமணியம் அவர்கட்கும், அவருடைய சகோதரர் திரு அம்பாலவாணர், சகோதரிகள் ஆகியோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்குவோம். (க)

## சென்னையில் அஞ்சலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்திப்பதற்காக புதுடில்லி செல்லும் வழியில்சென்னையில் காலமான திரு. கதிரவேலுப்பிள்ளையின் பூதவுடல் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து ஏயர்லங்கா விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டது.

சென்னை விமான நிலையத்தில் பாவாணர் பெருஞ்சித்திரனுர் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இதில் தி. மு. க. பொருளாளர் திரு. சாதிக் பாட்ஷா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பிரதமர் நேரில் அஞ்சலி

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும் பதினைந்துஅமைச்சர்களும் இன்று பிற்கபல் விசேஷ விமானம்மூலம் யாழ்ப்பாணம் வருகின்ருர்கள். இவர்களுடன் பிரதி அமைச்சர்களும் முக்கிய பிரமுகர்களும் எம்.பி.க்களும் இங்கு வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று பிற்பகல் 2-30க்கு பலாலி விமானநிலையம் வந்து சேரும் அமைச்சர்கள்! மாலை 3-30 மணிக்கு நகர மண்டபத்தில் நேரில் அஞ்சலி செலுத்துவார்கள்.

## கிளிநொச்சியில் கறுப்புக் கொடி

கிளிநொச்சி, முறிகண்டி, பரந்தன், ஆனையிறவு ஆகிய பகுதிகளில் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியின் இல்லத்தில் மறைந்த கோப்பாய் எம். பி க்கு இறுதி மரியாதை செலுத்துமுகமாக உதயசூரியன் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

## கோப்பாய் எம்.பிக்கு மௌனப்பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவர் கோவிலடி சனசமூக நிலையத்தினர் நேற்றுக்காலை சனசமூக நிலையமுன்றலில் மறைந்த தலைவர் கோப்பாய் எம்.பி.க்கு மௌனப் பிரார்த்தனையொன்றை நடாத்தினர்.

இப்பிரார்த்தனை சனசமூக நிலையத்தலைவர் திரு. ப. சந்திரமோகன் தலைமையில் நடைபெற்றதுடன் மறைந்த எம். பி. யின் குடும்பத்தினருக்கு அனுதாபச் செய்தி அனுப்பும் தீர்மானமும் இங்குநிறைவேற்றப்பட்டது. (சி)

## ஆணையாளர் இன்று வருகிருர்

(யாழ்ப்பாணம்)

கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் திரு. ஜி. ஜி. விக்கிரமசூரியா வடபகுதி விவசாயிகளின் தேவைகள், சாதனைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகிருர்.

இவர் நாளைகாலை கொழும்பு திரும்புவார். (கு-கு)

## 'ஆற்றல்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

திலைநாட்டினுர் என்பதைநான் குறிப்பிடவேண்டும்,

அவரது துணைவி மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். (க-கு)

## இலங்கையில் தேன்நிலவைக் கழிப்பர்

லண்டன் ஏப். 1

பிரிட்டன் இளவரசர் சாள்சுக்கும் சீமாட்டி டயானு ஸ்பென்சருக்கும் இவ்வருடம் ஜூலை மாதம் திருமணம் நடந்த பின்னர் இந்து சமுத்திரத்தின் மத்தியிலுள்ள இலங்கைத்தீவில் அவர்கள் தேனிலவைக் கழிப்பார்கள் என்று பக்கிங்காம் மாளிகை பேச்சாளர் தெரிவித்தார்.

மரண அறிவித்தல்

நல்லூர் முருகேசு பிள்ளையம்மா

திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா வீதியைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் முருகேசுவின் அன்பு மனைவி பிள்ளையம்மா காலமாகிவிட்டார். இவர் செங்குந்த இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் பரமேஸ்வரன், மகேஸ்வரி, மட்டக்களப்பு அரசினர் கல்லூரி ஆசிரியை பரமேஸ்வரி, யோகேஸ்வரி, யாழ். ப நோ. கூ. சங்கம் விக்னேஸ்வரன், ஜெகதீஸ்வரி (லண்டன்) ஆகியோரின் தாயாரும், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆசிரியர் பரமேஸ்வரன், மட்டக்களப்பு இ போ. ச. விசாரணை அதிகாரி சுந்தரலிங்கம், சட்டத்தரணி ஆலாலசுந்தரம், புனிதசிலி, புஷ்பராணி ஆகியோரின் மாமியும், வெற்றிச்செழியன், முருகுசெழியன். வெற்றிச்செல்வி, வசுமதி, விஜித்தா, திருமாறன், சிவமாறன், அனுசூயா, அனிஸ், ஆதவன், ஜவாகர் ஆகியோரின் பேத்தியும், பத்மசோதி, பத்மகாந்தன் ஜெர்மனி) ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 2-4-81 (இன்று). வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு செம்மனி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். 8753

பயிற்சி

றேடியோ - டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங், மூன்றுமாத டிப்பிளோமா பயிற்சிகள் சனி, ஞாயிறு வகுப்புக்கள் 3-4-81 வரை மாணவர் அனுமதிக்கப்படுவர். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8729

மரண அறிவித்தல்

மு. பூபாலசிங்கம்

திருநெல்வேலி ராஜவீதியைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் றோயல் மோட்டோர்ஸ் (Royal Motors-Jaffna) உரிமையாளருமான முருகேசு பூபாலசிங்கம் சமாதான நீதவான் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், லோகேந்திரா. சிறிகுமார் (U. K.) சக்திகுமார் (France) திருமதி ஜயந்தினி நடேசன் (U. K.) ஜயந்திகுமார், சுகிர்தினி, சுரேஷ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ச. நடேசன் (U. K.) அவர்களின் மாமனுருமாவார். அன்னாரின் பூதவுடல் ராஜ வீதியிலுள்ள இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக இன்று மாலை நாலு மணிக்கு செம்மனி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
8751

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் கிறவனுக்காரால் யாழ்ப்பாணம் ... வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் ஏப்பிரல் 2 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper, at the General Post Office, Sri Lanka under No. QH 6943/74 The Eelanaadu P.O. Box 49, Telegram: "Eelanaadu" Phone: 889 / 8126